Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

(C646) Job! With High Salary
Follow
Cima_UK, BIT
(O/L,A/L not necessary)
MCS 324,Palaly Road,Parameswara Junction
www.mcsitcampus.org
SMS your name & course to 772 395 095 & Get Schol.



முரசு - 01 | திருவள்ளுவர் ஆண்டு 2042 | சித்திரை 14 | புதன்கிழமை | (27.04.2011) | பக்கங்கள் 12+IV | ஓசை - 210

## சாய்பாபாவுக்கு இறுதிக் கிரியைகள்

### புட்டபர்த்தியில் ஜனசமுத்திரம்



(ஆந்திரா)

மகா சமாதியடைந்த பகவான் ஸ்ரீ சத்ய சாய் பாபாவின் ஸ்தூல சரீரத்திற்கு இறுதி அஞ்சலி செலுத்துவதற்காக உலகின் பல பகுதிகளில் இருந்தும் இலட்சக்கணக்கான பக்தர்கள் புட்டபர்த்திற்கு சென்ற வண்ண முள்ளனர்.


தனது 85 ஆவது வயதில் மகா சமாதி யடைந்த பகவான் ஸ்ரீ சத்ய சாய்பாபா வின் ஸ்தூல (11 ஆம் பக்கம் பார்க்க)

## போர்க் குற்றங்களுக்கு செய்மதிப் படங்கள் ஆதாரம்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் நிபுணர் குழுவின் அறிக் கைக்கு சற்றலைட் சான்றாக உள்ளது என சற்றலைட் இமேஜ் தொழில் நுட்ப கழக இயக்குநர் லார்ஸ் புறொம்லி தெரிவித்துள்ளார்.

வொயிஸ் ஓ்.ப் அமெரிக்காவிற்கு வழங்கிய செவ் வியில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றச் சாட்டுகளுக்கு ஆதாரமாக எம்மால் எடுக்கப்பட்ட சற்றலைட் படங்கள் இருக்கின்றன. மே மாதம் 6 ஆம் திகதியும் (11 ஆம் பக்கம் பார்க்க)



# யுத்த விசாரணை சாத்தியமில்லை;
# ஐ.நா. அறிக்கையில் அம்பலம்

### யுத்தம் செய்த இரு தரப்பும் குற்றவாளிகள்

#### அரசு மீது பொழியும் போர்க்குற்றங்கள்

- பாரதூரமான ஷெல் தாக்குதல்களில் பொது மக்களைக் கொன்றது.
- மருத்துவமனை மற்றும் மனிதநேயப் பணிகளுக்குப் பயன்படும் இடங்களைத் தாக்கியது.
- மனிதாபிமான உதவிகளைச் செய்யவிடாமல் தடுத்தது.
- போரால் பாதிக்கப்பட்டோர் மற்றும் போரில் தப்பிப் பிழைத்தோர் சந்திக்கும் (11 ஆம் பக்கம் பார்க்க)

(கொழும்பு)

**இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப் படும் யுத்தக் குற்றங்கள் மற்றும் மனித உரிமைகள் தொடர்பான ஐ.நா நிபுணர் குழுவின் அறிக்கை பெரும் பரபரப்புக்கும் எதிர்பார்ப்புகளுக்கும் மத்தியில் நேற்று உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்டிருக் கிறது.** (11 ஆம் பக்கம் பார்க்க)

#### புலிகள் மீது விரியும் போர்க்குற்றங்கள்

- பொதுமக்களை மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்தியது.
- புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலிருந்து தப்பிச்செல்ல முயன்ற பொதுமக்களைக் கொலை செய்தது.
- பொதுமக்கள் தங்கியிருந்த இடங்களில் இராணுவ ஆயுதங்களை வைத்திருந்து பயன்படுத்தியது.
- சிறார்களை பலவந்தமாக (12 ஆம் பக்கம் பார்க்க)

## சமாதானத்தை ஏற்படுத்தும் அரசின் முயற்சியை நிபுணர் குழு அறிக்கை உதாசீனம் செய்துள்ளது



### பாதுகாப்புச் செயலர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

வடக்கு, கிழக்கில் நல்லிணக் கத்தையும் சமாதானத்தையும் ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் மேற்கொண்டுவரும் பாரிய முயற்சிகளை ஐ.நாவின் நிபுணர் குழு வெளியிட்ட அறிக்கை உதாசீனம் செய்துள்ளதாக பாது காப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மணிலா டைம்ஸ் ஊடகத் திற்கு அளித்த விசேட செவ்வி யிலேயே அவர் இவ்வாறு தெரி வித்தார். அந்தச் செவ்வியில் அவர் மேலும் தெரிவித்துள் ளதாவது -

யுத்த வலயத்தில் கசப்பான அனுபவங்கள் தொடர்ந்ததாக வெளிக்காட்டுவதற்கு நிபுணர் குழு தனது அறிக்கையின் மூலம் முனைப்பு காட்டியுள்ளது. (12 ஆம் பக்கம் பார்க்க)

## தந்தை செல்வாவின் சிரார்த்த தினம் யாழில் உணர்வுபூர்வமாக அனுஷ்டிப்பு



(யாழ்ப்பாணம்)

தந்தை செல்வநாயகம் அவர்களின் 34ஆவது ஆண்டு நினைவுநாள் நிகழ்வுகள் நேற் றுக்காலை யாழ். நகரிலுள்ள செல்வா நினைவுச்சதுக்கத்தில் மிகவும் உணர்ச்சிபூர்வமாக நடைபெற்றது.

நேற்றுக்காலை 9.30 மணி யளவில் ஆரம்பமான இந்நிகழ் விற்கு அருட்திரு. கலாநிதி சு. ஜெபநேசன் தலைமை தாங்கி னார்.

இந்நிகழ்வில் தந்தை செல் வாவின் சிலைக்கும், சமாதிக் கும் மாலையிட்டு, மலர் தூவி அஞ்சலி செலுத்திய பின்னர், கூட்ட (12 ஆம் பக்கம் பார்க்க)

## ஆட்கடத்தல், போதைப்பொருள் வர்த்தகம்; புலிகள் தொடர்ந்தும் ஈடுபடுகின்றனர்

### ஐரோப்பிய பொலிஸார் தெரிவிப்பு

(கொழும்பு)

சட்டவிரோத ஆட்கடத்தல் மற்றும் போதைப்பொருள் கடத் தல் நடவடிக்கைகளில் புலிகள் தற்போதும் ஈடுபட்டு வருவதாக ஐரோப்பிய பொலிஸ்துறையான 'யூரோபோல்' தெரிவித்துள்ளது.

பயங்கரவாத நிலைமைகள் குறித்த 2011 ஆம் ஆண்டுக்கான அறிக்கையில் இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பீ.கே.கே. கொங்கரா ஜெல் மற்றும் புலிகள் உள்ளிட்ட அமைப்புக்கள் சட்டவிரோத நட வடிக்கைகளில் ஈடுபட்டு வருவ தாகக் குற்றம் சுமத்தப்பட்டுள் ளது.

நிதி மோசடி, கடன் அட்டை மோசடி, சட்டவிரோத குடியேற் றம், பயங்கரவாத நடவடிக்கை களுக்கு நிதி உதவி அளித்தல் போன்ற நடவடிக்கைகளில் புலி கள் ஈடுபட்டு வருவதாகக் குற் றம் (11 ஆம் பக்கம் பார்க்க)

## நிபுணர் குழுவின் அறிக்கை குறித்து ஆராய தமிழ் கட்சிகள் ஒன்றிணைய வேண்டும்



### மனோ கணேசன் அழைப்பு

(கொழும்பு)

நிபுணர் குழுவின் அறிக்கை தொடர்பாக ஆராய்ந்து பொது நிலைப்பாட்டை எடுப்பதற்கு அனைத்து தமிழ்க் கட்சிகளை யும் உள்ளடக்கிய குழுவொன்றை அமைக்கவேண்டும் என ஜன நாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோகணேசன் வலி யுறுத்தியுள்ளார். இது தொடர் பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக் கப்பட்டுள்ளதாவது,

நிபுணர் குழுவின் அறிக்கை போரின் இறுதிக்கட்டம் தொடர் பிலான ஆய்வு எனக் கூறப்பட் டாலும் கூட இந்த நிபுணர் குழு வினர் (12 ஆம் பக்கம் பார்க்க)

#### மாணவச் செல்வங்களே

☞ **உள்ளே கல்வி முரசு**

தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை 2011 பகுதி II இன் விசேட வினாத்தாள் இணைக் கப்பட்டுள்ளது.

# கடற்தொழிலில் ஈடுபடுபவர்களுக்கு இல.வங்கியுடன் இணைந்து கடன்திட்டம்

## மாவட்ட உதவிப்பணிப்பாளர் தகவல்

(யாழ்ப்பாணம்)

கடற்தொழில் நீரியல் வள திணைக்களம் இலங்கை வங்கியுடன் இணைந்து கடற்தொழிலாளர்களுக்கு கடன் வழங்கும் திட்டத்தை ஆரம்பித்துள்ளதாக கடல் தொழில் நீரியல் வள திணைக்கள மாவட்ட உதவிப் பணிப்பாளர் இ.ரவீந்திரன் தெரிவித்தார். அவர் மேலும் தகவல் தெரிவிக்கையில்:

கடற்தொழிலாளர்கள் படகு, இயந்திரம்,வலை மற்றும் தொழில சார் உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கே இந்த கடன் வழங்கப்படுகிறது.

ஒருவர் ஆகக்கூடிய தொகையாக 10 மில்லியன் ரூபா கடனை பெற்றுக்கொள்ளலாம்.

20 இலட்சம் ரூபாவுக்கு உட்பட்ட கடன்களுக்கு 5.5 வீத வட்டியை கடன் பெறுபவர் செலுத்த வேண்டும் 4 வீத வட்டியை கடல தொழில் திணைக்கழகம் செலுத்தும்.

20 லட்சம் ரூபாவுக்கு மேற்பட்ட கடன்களுக்கு 8 வீத வட்டி கடன் பெறுபவருக்கு 4வீத வட்டியை திணைக்களமும் செலுத்தும். கடன்பெற விரும்பும் கடல் தொழிலாளர்கள் பண்ணையிலுள்ள கடல்தொழில் நீரியல் வள திணைக்களத்தில் விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ள முடியுமென அவர் தெரிவித்தார்.

# அலுவலகம் இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பிறவுண் வீதியில் இயங்கிவந்த கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகம் கடந்த வாரம் முதல் பூதர் மடத்தடி கோப்பாயில் அமைந்துள்ள கால் நடை வைத்திய அலுவலகத்துக்கு தற்காலிகமாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இவ்அலுவலகத்தில் சேவையை பெற்று கொண்ட பண்ணையாளர்கள் 3ஆம் குறுக்குத்தெரு யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கால்நடை வைத்தியசாலையில் அல்லது பலாலி வீதி திருநெல்வேலியில் உள்ள விலங்கு புலனாய்வு நிலையக் கட்டடத்தில் இயங்கும் நல்லூர் கால்நடை வைத்திய அலுவலகத்தில் தங்களுக்குரிய சேவையை பெற்றுகொள்ளமுடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (கா)

# பொது இடத்தில் கைகலப்பு நால்வருக்கு அபராதம்

(சாவகச்சேரி)

பொதுஇடத்தில் கைகலப்பில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட 4 பேருக்கு எதிராக கடந்த தை மாதம் 20 ஆம் திகதி தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்றையதினம் சாவகச்சேரி நீதிமன்றினால் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

சாவகச்சேரி நீதிமன்ற நீதவான் மா. கணேசராசா முன்னிலையில் குறித்த நால்வரும் ஆஜர்படுத்தப்பட்டபோது அவர்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து குறித்த நால்வருக்கும் தலா ஆயிரத்து 500 ரூபா வீதம் தண்டப்பணமாக செலுத்துமாறு உத்தரவிட்டார்

அத்துடன் முறைப்பாட்டுக்காரருக்கு 12 ஆயிரம் ரூபா நஷ்டஈடு வழங்குமாறும் கூறியதுடன் குறித்த நாவல்வரில் லண்டன் வாசியான ஒருவரின் பறிமுதல் செய்யப்பட்ட கடவுச்சீட்டை திருப்பி வழங்குமாறும் நீதிபதி பதிவாளரிடம் உத்தரவிட்டார். (11)

# மழைக்கு ஒதுங்கிய சிறுமியின் தலையைப் பதம்பார்த்த கல்

(யாழ்ப்பாணம்)

கடும் மழை பெய்தவேளை பாழடைந்த கட்டம் ஒன்றில் மழைக்கு ஒதுங்கி நின்ற சமயம் அக்கட்டத்தின் சுவர் கல்ஒன்று உடைந்து சிறுமி ஒருவர்மீது வீழ்ந்ததில் அவர் படுகாயமடைந்த சம்பவமொன்று நேற்று வடமராட்சி கிழக்கு ஆழியவளைப் பகுதியில் இடம்பெற்றது.

நேற்று நண்பகல் 12.30 மணியவில் இடம்பெற்ற இச்சம்பத்தின் போது ஆழியவளை தாளையடியைச்சேர்ந்த செல்வகுமார் லயன்சி (வயது 08) என்பவர் தலையில் படுகாயமடைந்ததுடன் அவரது இடது காலில் முறிவும் ஏற்பட்டுள்ளது.

இவர் அங்கிருந்து அம்புலன்ஸ் மூலமாக யாழ். போதனாவைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்டு சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவத்தின் போது இரண்டு சிறுமிகள் குறித்த கட்டத்தில் மழைக்கு ஒதுங்கியிருந்ததாகவும் அதில் ஒருவர் தெய்வாதினமாக காயமெதுவுமின்றித்தப்பியதாகவும் தெரியவருகின்றது. (பா)

# செம்மணி வீதியில் விபத்து தந்தையும், மகனும் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ் நகரில் இருந்து பொருட்களை வாங்கிக்கொண்டு மோட்டார்சைக்கிளில் வீடுதிரும்பிக்கொண்டிருந்த மகனும் தந்தையும் செம்மணிவீதி நாவற்குழி பாலத்திற்கருகில் பேருந்துடன் மோதி விபத்திற்குள்ளாகியதில் அவர்கள் இருவரும் படுகாயமடைந்தனர். நேற்றுப் பிற்பகல் 1.30 மணியளவில் நடைபெற்ற இச்சம்பவத்தில் தவசி தியாகராசா (வயது 45) தியாகராசா தர்சன் (வயது 22) ஆகிய இருவருமே படுகாயமடைந்து யாழ். போதனாவைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் பற்றி தெரியவருவதாவது யாழ். நகரில் இருந்து தியாகராசா தர்சன் என்பவர் தனது தந்தையுடன் தனது பிறந்த நாளுக்கு தேவையான பொருட்களை வாங்கிக்கொண்டு தென்மராட்சி திரும்பிக்கொண்டிருக்கையில் செம்மணிவீதியில் அவர்களுக்கு பின்புறமாக வந்த மல்லாவி செல்லுவதற்காக வந்த பேருந்து பின்பக்கத்தால் குறித்த மோட்டார்சைக்கிளை மோதியதில் அது விபத்திற்குள்ளாகி வயற்பகுதியில் வீழ்ந்தது. இதில் இருவரும் படுகாயமடைந்த நிலையில் இருவரும் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டனர். (பா)


திறப்பு விழா

மகேஸ்வரி நிதியம்
வடமராட்சி கிளை அலுவலகம்

இடம்:- பிரதான வீதி, நெல்லியடி, கரவெட்டி
(பொதுச்சந்தை அருகாமை)
காலம்:- 29.04.2011 அன்று
சுபநேரம் காலை 8.15

வடமராட்சி மக்களின் நலன்கருதி மகேஸ்வரி நிதியமானது தனது கிளை அலுவலகம் ஒன்றினை வடமராட்சிப் பிரதேசத்தில் திறந்து வைக்கவுள்ளது. இதில் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு:- 29.04.2011 வெள்ளிக்கிழமை முதல் கரவெட்டி, பருத்தித்துறை, மருதங்கேணி பிரதேச செயலகங்களுக்கு உட்பட்ட மணல் பயனாளிகள் தமது பதிவுகளை ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் இப் புதிய அலுவலகத்தில் மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

த.றஜீவ்
செயற்திட்ட இணைப்பாளர்
மகேஸ்வரி நிதியம்

(C/522)


# இலங்கை வங்கியில் வேலைவாய்ப்பு விண்ணப்பம் இன்றுடன் பூர்த்தியாகிறது

(மானிப்பாய்)

நாடளாவிய ரீதியில் இலங்கை வங்கியில் உள்ள பதவிகளுக்கு உரிய தகைமையும், சுறுசுறுப்பும் அனுபவமும் உள்ள இளைஞர், யுவதிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது.


அந்த வகையில் பயிலும் செயலாளர், உதவியாளர்கள் பதவிக்கு ஆண், பெண் இருபாலர்களிடமும் விண்ணப்பம் கோரப்பட்டுள்ளதுடன், அடிப்படைத்தகுதியாக க.பொ.த உயர்தரத்தில் 02 பாடங்கள சித்தியடைந்திருக்க வேண்டும் அத்துடன் க.பொ.த சாதாரணதரத்தில் ஆங்கிலப்பாடத்தில் சித்தியடைந்திருப்பதுடன் ஆங்கில தட்டச்சு, சுருக்கெழுத்தில் சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும்.

பல்- கடமை உதவியாளர்கள் பதவிக்கு ஆண் விண்ணப்பதாரிகளுக்கான கல்வித்தகைமையாக க.பொ.த சாதரணதரப் பரீட்சையில் 03 பாடங்களில் திறமைச்சித்தியுடன், தமிழ், கணிதம், ஆங்கிலம் ஆகிய பாடங்கள் உட்பட 06பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும். அத்துடன் 18 வயதுக்கும் 24 வயதுக்கும் இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.

சாரதிகள் பதவிக்கு ஆண் விண்ணப்பதாரிகளுக்கான கல்வித்தகைமையாக 08 ஆம் தரத்தில் சித்தியடைந்திருப்பதுடன், சாரதியாக 05 வருடங்கள் சேவையாற்றியமைக்கான சான்றிதழ் பெற்றிருக்கவேண்டும். மேற்படி பதவிகளுக்கான விண்ணப் பிப்பதற்கான இறுதித் தினம் இன்றாகும். (33)

# லக்கிஸ்ரார் கிண்ணம் வென்றது

ஆண்கள்,பெண்களுக்கிடையே நடாத்தப்பட்ட கபடி, வலைப்பந்து போட்டியில் வட்டக்கச்சி லக்கிஸ்ரார் விளையாட்டுக்கழகம் சம்பியனாக தெரிவாகியுள்ளது. கரைச்சிப்பிரதேச செயலர் பிரிவில பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையே நடாத்தப்பட்ட ஆண்களுக்கான கபடிப் போட்டியிலும் பெண்களுக்கான வலைப்பந்து போட்டியிலும் முதலாம் இடத்தினைப் பெற்று 2011ஆம் ஆண்டுக்கான சம்பியனாக வட்டக்கச்சி லக்கிஸ்ரார் விளையாட்டுக்கழகம் சம்பியனாக தெரிவாகியுள்ளது. (45)



யாழ். கோப்பாய் வடக்கு றோ.க.த.க. பாடசாலையின் சமயலறைத்திறப்பு விழாவின்போது பிரதம விருந்தினராகக்கலந்து கொண்ட ஈ.பி.டி.பியின் கோப்பாய் பிரதேச அமைப்பாளர் இ.ஐங்கரன் கணினி ஒன்றை அதிபரிடம் கையளிப்பதையும் நிகழ்வில் கலந்துகொண்ட பழைய மாணவர்களையும், பொதுமக்களையும் படங்களில் காணலாம்.

நீ எந்த மந்திரத்தைச் சொல்லாவிட்டாலும், சர்வதேச ஜ்வரூபமான காயத்ரி மந்திரத்தை இடைவிடாது சொல். உன் கஷ்டங்கள் உன்னை ஓரளவும் தொல்லைப்படுத்தாது.

- பாபா -

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

## நாமும் இணைவோம்

கோடிக்கணக்கான பக்தர்களின் இதயங்களில் இடம்பிடித்திருந்த பகவான் சத்ய சாயிபாபா அத்தனை இதயங்களையும் துடிதுடிக்கவைத்து விட்டு சமாதி அடைந்து இன்றுடன் நான்கு தினங்கள் ஆகிவிட்டன.

அவர் சமாதி அடைந்து நான்கு தினங்களைக் கடந்துள்ள நிலையில் அவரது கை அசைப்புக்களையும், புன்முறுவலுடன்கூடிய சிரிப்பையும், ஒளி பொருந்திய கண்களையும் பக்தர்கள் தம் நினைவுகளில் இருந்து மறக்க முடியாது தவிப்பதையும் உணர முடிகிறது.

சாயி பாபா மீண்டும் அவதரிப்பார் என்ற பல அதிர்ச்சித் தகவல்கள் தற்போது வெளிவந்து கொண்டிருக்கும் நிலையில், அவரது கோடிக் கணக்கான பக்தர்கள் இப்படியும் நடக்குமா? என்று நம்பிக்கையுடன் கேள்வி எழுப்பி வருவதை அவதானிக்க முடிகிறது.

"அனைவரையும் நேசி; அனைவருக்கும் சேவை செய்; எல்லோருக்கும் உதவு; எவரையும் வெறுக்காதே" என்பதுதான் அவரது தாரக மந்திரமாக இருந்தது.

சீரடி சாயி பாபாவின் மறு அவதாரம் என்று கூறிக்கொண்டு பலவிதமான அற்புதங்களை யெல்லாம் தன்னைத் தரிசிக்க வருபவர்களுக்கு நிகழ்த்திக் காட்டிய பாபா, அன்பு வழியில் ஆண்டவனின் பக்தியில் ஈடுபடுங்கள். மனிதனாகப் பிறந்த நீங்கள் சோதனைகளை ஏற்கவேண்டும். உண்மை, தர்மம், கருணை, மன்னிக்கும் மனப்பாங்கு என்பவற்றை கடைப்பிடித்து மனதைத் தூய்மையாக வைத்துக் கொண்டால் வெற்றி பெறலாம் என்று கூறிவந்துள்ளார்.

ஆன்மீகத்தின் உச்சியிலிருந்த பாபா, ஆன்மீகச் சேவையில் மட்டும் நிற்காமல், மருத்துவம், கல்வி, விளையாட்டு என்பன போன்ற பன்முகப்படுத்தப்பட்ட சேவைகளில் தன்னை முழுமையாக அர்ப்பணித்திருந்தார்.

உலக நாடுகளில் 137 நாடுகளில் தன்னுடைய பக்தர்களை நிறைத்துக் கொண்டுள்ள பாபாவிடம், தரிசனம் பெறாத அரசியல் தலைவர்களோ, அறிஞர்களோ, கலைஞர்களோ, நீதிபதிகளோ, விஞ்ஞானிகளோ இல்லை என்றே கூறலாம்.

ஆந்திரா மாநிலத்தில் புட்டபர்த்தி என்று கூறப்படும் புண்ணிய பூமியில் உள்ள பிரசாந்தி நிலையத்திற்குச் சென்று பாபாவைத் தரிசிக்காதவர்கள் எவரும் இல்லை என்றே கூறலாம்.

அவரைத் தரிசிப்பதற்கு அவரது அன்புக் கரம் நீளும் வரை பக்தர்கள் காத்திருப்பார்கள். இத்தகைய காத்திருப்பின் மத்தியில் அவரது அன்புக் கரம் நீண்டதும் பக்தர்கள் அடையும் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

இத்தகைய தெய்வீகத் தன்மை கொண்ட ஆன்மீகத் தலைவர் சமாதி அடைந்ததை அடுத்து ஆந்திரா, கர்நாடக மாநிலங்களின் அரசுகள் நான்கு நாட்களை துக்கதினமாக பிரகடனப் படுத்தியிருந்தது.

இரவு பகல் என்று பாராது கண்ணாடிப் பேழையினுள் அமைதித் துயில் கொள்ளும் பாபாவிற்கு இறுதி அஞ்சலி செலுத்துவதற்கு அவரது பக்தர்கள் முண்டியடித்து வருகிறார்கள்.

இறுதி நாளான இன்று லட்சோப லட்சக் கணக்கான பக்தர்கள் அவருக்கு இறுதி அஞ்சலி செலுத்துவார்கள் என்ற எதிர்பார்ப்புடன் ஆந்திரா மாநில அரச மரியாதையுடன் பாபா ஏற்கனவே குறித்த இடத்தில் சமாதி அடையவுள்ளார்.

அவரது சமாதி நிலை குறித்து அஞ்சலி செலுத்தும் கோடிக்கணக்கான பக்தர்களுடன் நாமும் இணைந்து அஞ்சலி செலுத்தி, அவர் காட்டிய ஆன்மீக வழியில் செல்வோமாக...

-ஆசிரியர்-

ஊவா மாகாண சபையும், படையினரும் இணைந்து

# கோப்பாய் நாவலர் வித்தியாலயத்துக்கு புதிய கட்டடம் நிர்மாணிப்பு

(யாழ்ப்பாணம்)

ஊவாமாகாண சபை முதலமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் கோப்பாய் நாவலர் வித்தியாலயத்தின் புதிய வகுப்பறைக்கட்டடத்தொகுதி ஒன்று நிர்மாணித்துக் கொடுக்கப் படவுள்ளதாக யாழ் கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதற்கான நிர்மாணப் பணிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

இப்பாடசாலை வகுப்பறைக் கட்டடத் தொகுதியின் நிர்மாண வேலைகளை யாழ். கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க அவர்களின் பணிப்பின் பேரில் இராணுவ பொறியியல் பிரிவினர் அமைத்து வருகின்றனர். இதற்கான நிர்மாணச் செலவு (கூலி) படையினரால் பொறுப்பேற்கப்பட்டுள்ளது. மூலப் பொருள் மற்றும் ஏனையவை ஊவா மாகாண சபையினால் பொறுப்பேற்கப்பட்டுள்ளது. மேலும் இந்நிர்மாணப் பணிகள் தொடர்பாக மேற்பார்வை செய்யும் முகமாக ஊவா மாகாண சபை அதி காரிகள் குழு ஒன்றும் யாழ். வலய கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் அவர்களுடன் நேற்றுக் கோப்பாய்க்கு விஜயம் செய்ததாக அவ்வட்டாரங்கள் தெரிவித்தன. (பா)

# முன்னாள் புலி உறுப்பினர்களுக்கு போதியளவு பயிற்சி அளிக்கப்பட்டது


## சித்திரக் கண்காட்சியில் அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

கல்வி அறிவற்ற நிலையில் புனர்வாழ்வு நிலையங்களுக்கு வருகை தந்த முன்னாள் புலி உறுப்பினர்கள் பல்கலைக்கழகங்களுக்கு நுழையுமளவுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளதாக மனித வள சிரேஷ்ட அமைச்சர் டி.யூ. குணசேகர தெரிவித்தார்.

புனர்வாழ்வு நிலையங்களில் பயிற்சிபெற்று பல்கலைக்கழகங்களுக்கு முன்னாள் புலி உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்ட வரலாறு இலங்கையில் மாத்திரமே இடம்பெற்றுள்ளது.

"கலையூடான மாற்றத்தின் மீதான மீள்சிந்தனை" எனும் தொனிப்பொருளில் புனர்வாழ்வு நிலையங்களிலுள்ள முன்னாள் புலி உறுப்பினர்களால் வரையப்பட்ட சித்திரங்களின் கண்காட்சி நேற்று முன்தினம் கொழும்பு கலாபவனத்தில் ஆரம்பமானது.



இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த 30 வருட கால யுத்தத்தில் ஈடுபட்ட படையினர் மனிதநேய புனர்வாழ்வு நடவடிக்கைப் பணிகளில் இலகுவாக ஈடுபடுவதற்கு கலாசார மரபுகளே முக்கிய காரணமாகும்.

புனர்வாழ்வு நிலையங்களிலிருந்து விடுவிக்கப்பட்டவர்கள் தொடர்பில் சமூகத்திலிருந்து எதுவித முறைப்பாடுகளும் இதுவரை வெளிவரவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலை மறுசீரமைப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீர, நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ரஜீவ விஜயசிங்க, இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் பெற்றீசியா பூட்டேன் மற்றும் புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் பிரிகேடியர் சுந்தர ரணசிங்க உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

# குடும்ப புனர்வாழ்வு நிறுவனம்; நடமாடும் மருத்துவ சேவை

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவுக் கிராமத்திற்கான நடமாடும் மருத்துவ சேவை ஒன்றை நேற்றுமுன்தினம் குடும்பப் புனர்வாழ்வு நிறுவனத்தினர் நடத்தினர். இதில் பெருமளவான அக்கிராம மக்கள் மருத்துவ சிகிச்சைகளைப் பெற்றுப் பயனடைந்துள்ளனர்.

கடந்த சில மாதங்களாக குடும்ப புனர்வாழ்வு நிறுவனத்தினர் இக்கிராமத்திற்கான நடமாடும் மருத்துவ சேவையினை நடத்தி வருகின்றனர்.

இந்நடமாடும் மருத்துவ சேவையின் போது காய்ச்சல், தடிமன், இரத்த அழுத்தம், தோல் வியாதிகள் முதலியவற்றுக்கான சிகிச்சைகள் வழங்கப்பட்டுள்ளன.

காலை 8 மணிமுதல் நண்பகல் 12 மணிவரை மாதாந்தம் நடத்தப்பட்டு வரும் இம்மருத்துவ சேவையின் அடுத்த நடமாடும் மருத்துவ சேவை மே மாதம் 10 ஆம் திகதி நடைபெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

வைத்தியசாலை வசதி அற்றுக் காணப்படும் இக்கிராமத்திற்கு மேற்படி நிறுவனத்தினர் வழங்கி வரும் நடமாடும் மருத்துவ சேவை அப்பகுதி மக்களிடையே மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (பா)

# 10 ஆயிரத்துக்கு மேற்பட்ட கால்நடைகள் பதிவு இலக்கத்தகடுகளும் வழங்கப்பட்டுள்ளன

(முரசுமோட்டை)

கிளிநொச்சி மாவட்டத்தில் இதுவரை 10 ஆயிரத்துக்கு மேற்பட்ட கால்நடைகள் பதிவு செய்யப்பட்டு அவற்றுக்கான இலக்கத்தகடுகளும் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கிளிநொச்சி மாவட்டத்தில் மீள் குடியேறிய கால்நடை பண்ணையாளர்கள் தமது கால்நடைகளை கால்நடை வைத்தியர்களிடம் பதிவு செய்து அவற்றுக்கான மருத்துவச் சான்றிதழ்களையும் பெற்று வருகின்றனர்.

இதனடிப்படையில் கிளிநொச்சி மாவட்டத்தில் இதுவரை 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கால்நடைகளின் உரிமைகள் தொடர்பாக பண்ணையாளர்களினால் உறுதிப்படுத்தப்பட்டு அவற்றுக்கான சான்றிதழ்களும் வழங்கப்பட்டுள்ளதாகவும் கால்நடைகளின் காதுகளில் இலக்கத்தகடுகள் பொறிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (110)

## சிரமதானம்

தும்பளை தெற்கு தமிழொலி மாணவர் மன்ற மாணவர்களால் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை சிரமதான நிகழ்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டது. இதன்போது வீதிகளில் காணப்பட்ட சொப்பிங் பைகள் அகற்றப்பட்டு, எரியூட்டப்பட்டன. (மா)

# குன்றும் குழியுமாக காட்சிதரும் தும்பளை திக்கமுனை வீதி

(வடமராட்சி)

பருத்தித்துறை தும்பளை வீதியில் திக்கமுனை விளையாட்டு அரங்குக்கு முன்பாகவுள்ள வீதி மிகவும் மோசமான நிலையில் சேதமடைந்துள்ளதாக அவ்வீதியால் பயணிப்போர் விசனம் தெரிவிக்கின்றனர்.

குறித்த வீதி குன்றும் குழியுமாகக் காணப்படுவதுடன் பெரிய கற்கள் வெளியே தெரியும் வகையில் சேதமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது பெய்து வரும் மழையினால் வெள்ளநீர் தேங்கி நிற்பதால் இவ்வீதியூடாக நாளாந்தம் பயணம் செய்யும் பொதுமக்கள், மாணவர்கள், வர்த்தகர்கள், பணியாளர்கள் எனப் பலர், பலத்த சிரமத்தின் மத்தியில்தமது பயணத்தை மேற்கொள்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனவே, பொதுமக்களின் நலனைக் கருத்தில் கொண்டு சம்பந்தப்பட்டவர்கள் இவ்வீதியைப் புனரமைத்துத் தருமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (100)

# அனுமதி பெறப்பட்டே கால்நடைகளை பிறமாவட்டத்திற்கு எடுத்துச் செல்லவேண்டும்

## கிளிநொச்சி கால்நடை திணைக்களம் அறிவிப்பு

(முரசுமோட்டை)

கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து வேறு மாவட்டங்களுக்குக் கால்நடைகளைக் கொணடு செல்வது தடைசெய்யப்பட்டுள்ளது. குறித்த மாவட்டம் அதிகளவு கால்நடை வளத்தினைக் கொண்ட மாவட்டமாகக் காணப்படுகிறது. கடந்த கால யுத்தத்தினாலும் இடப்பெயர்வினாலும் பல எண்ணிக்கையான கால்நடைகள் அழிவடைந்துள்ளன.

இதனைக் கருத்திற்கொண்டும், கால்நடை வளத்தினைப் பேணும் நோக்குடனும் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணம், வவுனியா ஆகிய மாவட்டங்களில் நல்லின கால்நடைகள் உள்ளன. ஆனால், இம்மாவட்டத்தில் உள்ளூர் கால்நடைகளே காணப்படுகின்றன.

இதேவேளை, வேறு மாவட்டங்களைச் சேர்ந்தவர்களது கால்நடைகள் கிளிநொச்சி மாவட்டத்தில் இருக்குமாயின், அவை தொடர்பாக அம்மக்கள் தங்களது கிராமத்திலுள்ள கால்நடை அபிவிருத்தித் திணைக்களம், கிராம சேவையாளர் மற்றும் மாவட்ட உதவி அரசாங்க அதிபர் ஆகியவற்றின் உறுதிப்படுத்தலுடன் விபரங்களையும் சமர்ப்பிக்க வேண்டும்.

அதன் பின்னர் மருத துவச் சான்றிதழ் வழங்கப்பட் டவுடன் தங்களது கால்நடைகளைக் கொண்டு செல்வதற்கு அனுமதி அளிக்கப்படும் என கிளிநொச்சி மாவட்ட கால் நடைத் திணைக்களம் அறிவித்துள்ளது. (110)

## சமூகவிரோதச் செயலில் ஈடுபட்ட இளைஞர்கள் மடக்கிப் பிடிப்பு

(கரணவாய்)

கரணவாய் ஜே/350 கிராம சேவையாளர் பிரிவில் சமூக விரோத செயல்களில் ஈடுபட்ட இரு இளைஞர்களைக் குறித்த பிரிவு கிராம சேவையாளர் சாதுரியமாகப் பிடித்து நெல்லியடிப் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளார். குறித்த இளைஞர்கள் இரவுவேளை வீதியால் சென்ற 2 முதியவர்களை அடித்ததாகத் தெரிவிக்கப்பட்டதை அடுத்தே கிராம சேவையாளர் இந்நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. நெல்லியடிப் பொலிஸார் குறித்த இரு இளைஞர்களுக்கு பொதுமக்கள் முன்னிலையில் தகுந்த தண்டனையை வழங்கிய துடன், பொலிஸ் பாதுகாப்பில் வைத்துள்ளதாகவும் தெரிவிக்கப் படுகிறது. தமது கிராமத்தில் சமூகவிரோதச் செயல்களில் ஈடுபடுவோர் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப்படுமென குறித்த பிரிவு கிராம சேவை யாளரான ரி.புவனேந்திரன் தெரிவித்தார். (18)

# போதியளவு நிதி ஒதுக்கீடு இன்மையால் உவர்நீர்த் தடுப்பணை தாமதம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் 37 உவர்நீர் தடுப்பு அணைகள் அமைக்கப்பட்டிருப்பதாகத் தேசிய நீர்வழங்கல் வடிகால் அமைப்புச் சபை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இவற்றில் 17 உவர் நீர்த்தடுப்பு அணைகள் யாழ். மாவட்ட அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளதாகவும், ஐந்து உவர் நீர்த் தடுப்பு அணைகள் புனரமைப்புச் செய்யப்படும் வேலைகள் நடைபெற்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மிகுதியானவற்றில் 12 உவர் நீர்த்தடுப்பு அணைகளின் புனரமைப்பு வேலைகள் மேற்கொள்வதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு யாழ். மாவட்ட உவர் நீர்த்தடுப்பு அணைகளைப் பராமரிப்பதன் மூலமாக இங்குள்ள நிலத்தடி நீரினைப் பாதுகாத்துக் கொள்ள முடியும் என்பதுடன், பயிர்ச்செய்கைக்கான விளை நிலங்களில் உவர் நீர் கலப்பதைத் தடுப்பதன் மூலம் உணவு உற்பத்தியை மேம்படுத்தக் கூடியதாக இருக்கும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது..

இதன் காரணமாக மிகுதியாகவுள்ள உவர்நீர்த் தடுப்பு அணைகளையும் புனரமைப்புச் செய்ய சம்பந்தப்பட்ட தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (பா)

## சதுரங்கப் போட்டி

(நெல்லியடி)

கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகளுக்கான சதுரங்கப் போட்டி இன்று காலை 8.00 மணிக்கு கிளிநொச்சி மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

15, 19 வயதுப் பிரிவின் இரு பாலாருக்கும் நடைபெறவுள்ள இப்போட்டியில் கலந்து கொள்ளும் போட்டியாளர்கள் உரிய நேரத்துக்கு வருகை தருமாறு கிளிநொச்சி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் விஷ்ணு தெரிவித்தார். (12)

# குடும்ப வன்முறை

*(நேற்றைய தொடர்ச்சி...)*

2005 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க குடும்ப வன்முறைகளைத் தடுப்பதற்கான சட்டத்தின் மூலம் குடும்பத்தில் இடம்பெறும் பலவிதமான இம்சைகளுக்கு எதிராக அணைக்கப்பட்டுள்ளது எனலாம்.

குடும்பத்தில் வாழும் அனைத்து அங்கத்தவர்களுக்கும் இந்தச் சட்டத்தின் மூலம் பாதுகாப்புக் கிடைக்கின்றது. அதாவது ஆண், பெண் வித்தியாசமின்றி இந்தச் சட்டத்தின் மூலம் நிவாரணங்களைப் பெற்றுக்கொள்ள இயலும்.

தனிக்குடும்பத்தில் (தாய், தந்தை மற்றும் பிள்ளைகள்) அங்கத்தவர்களைப் போன்று கூட்டுக்குடும்பத்தில் வாழும் (தாய், தந்தை, பிள்ளைகள், பாட்டன், பாட்டி, பேரன், பேத்தி) அங்கத்தவர்களுக்கும் இதன்மூலம் பாதுகாப்புக் கிடைக்கின்றது.

மத்தியஸ்த சபைகளானவை குடும்ப வன்முறைகள் தொடர்பாக கலந்துரையாடுவதற்கு நேரடியான அதிகாரங்களைக் கொண்டிராத போதிலும், மத்தியஸ்த சபைகளால் தவறுகள் என்ற விடயதானத்தின் மீது குடும்ப வன்முறைகள் ஆற்றுப் படுத்தப்படுகின்றன.

எமது கலாசாரப் பாரம்பரியங்கள் காரணமாக அலலது சமூகக் கட்டமைப்புச் சார்ந்த விடயங்கள் காரணமாக நாம் குடும்ப வன்முறைகளை பொலிஸிற்கோ அல்லது நீதிமன்றத்துக்கோ ஒரு வழக்காகத் தாக்கல் செய்வதில் பின்னிற்கின்றோம். இதனை நிவர்த்தி செய்யும் முகமாக மத்தியஸ்த சபைகள் ஒரு காத்திரமான பங்களிப்பைச் செய்யமுடியும்.

மத்தியஸ்தம் என்பது பிணக்குகளுக்குச் சுமுகமாக தீர்வுகாணும் பொறிமுறை என்ற வகையிலும் இரகசியத்தன்மையைப் பேணும் ஒரு இடமாக இருப்பதன் காரணமாகவும் குடும்ப வன்முறைகளைத் தடுப்பதற்கான சிறந்த பங்களிப்பைச் செய்ய முடியும் என்பது கருததிலெடுத்துக்கொள்ளப்படல் வேண்டும்.


எனவே, குடும்ப வன்முறைகளை மத்தியஸ்தம் செய்யும் மத்தியஸ்தர்கள் பெண்களுக்கெதிரான வன்முறைகள் மற்றும் குடும்ப வன்முறைகள் தொடர்பாக கருத்தியல் ரீதியானதும் பிரயோக ரீதியானதுமான அறிவு மற்றும் திறன்களைக் கொண்டிருப்பதோடு, இது தொடர்பான சட்ட ரீதியான ஏற்பாடுகளையும் அறிந்திருத்தல் இன்றியமையாததாகும்.

அதற்கு வழியமைக்கும் முகமாகவே இக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது. இங்கு குடும்ப வன்முறைகள் பற்றி வினா விடைகள் மூலம் விவரமாக விளங்குவதற்கு முயலுவோம்.

***1) 2005 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க குடும்ப வன் முறைகளைத் தடுக்கும் சட்டத்திற்கு முன்பு வீட்டிற்குள் நடைபெறும் வன்முறைகளுக்கு எதிராக இருந்த சட்டரீதியான பாதுகாப்பு எவ்வாறிருந்தன?***

- சர்வதேச ரீதியாகப் பெணகளுக்கு எதிரான சகலவிதமான பாரபட்சங்களைத் தடுக்கும் சர்வதேச சமவாயம்.
- தண்டனைச் சட்டக் கோவையும் விஷேடமாக அதற்கான 1995 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க திருத்தச் சட்டம்.
- சித்திரவதைகளைத் தடுக்கும் 1994 ஆம் ஆண்டுச் சட்டம்.
- விவாகரத்து, பராமரிப்பு தொடர்பாடல் சிவில் சட்ட நிவாரணங்கள்.

***2) மேற்கூறப்பட்ட சட்ட ஏற்பாடுகள் இருந்தபோதும் 2005 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க குடும்ப வன்முறைகளைத் தடுக்கும் சட்டத்தைக் கொண்டு வருவதற்கான காரணிகள் எவை?***



**மத்தியஸ்தம் மற்றும் மத்தியஸ்தப் பயிற்சி நிலைய அனுசரணையில் மத்தியஸ்தப் பயிற்சிப் பயிற்றுவிப்பாளர் சட்டத்தரணி மு.திருநாவுக்கரசினால் தொகுக்கப்பட்ட குடும்ப வன்முறை தடுப்புச் சட்டம் (2005 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கம்) இங்கு பிரசுரமாகிறது.**

இது பற்றித் தெளிவைப் பெறவேண்டுமாயின் சிவில் சட்டத்திற்கும் குற்றவியல் சட்டத்திற்குமிடையிலான வேறுபாடுகளை மனத்தில் இருத்திக் கொள்ளவேண்டும். இவை பற்றி இந்நூலின் தொடக்கத்தில் விளக்கப்பட்டுள்ளது. 2005 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க குடும்ப வன்முறைகளைத் தடுக்கும் சட்டம் சிவில் சட்ட நிவாரணமாகும். குற்றமானது தனிநபரொருவருக்கு எதிரான குற்றமாகவன்றி, முழு சமூகத்திற்கும் எதிராக அரசினால் வழக்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும். இங்கு குற்றச்செயலால் பாதிக்கப்பட்டவர் முறைப்பாட்டாளர் தரப்பிலான சாட்சியாக மட்டும் பங்கெடுப்பார். வீட்டிற்குள் நடைபெறும் குற்றச்செயலினால் பாதிக்கப்பட்டவர், குற்றச்செயல் புரிந்த நபருக்கு எதிராகச் சாட்சியமளிக்கும் போது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது முதல் தீர்ப்பு வழங்கப்படும் காலம் வரையும் பலவிதமான பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க நேரிடும்.

இலங்கையின் பிணைச் சட்டத்தின்படி சந்தேக நபர் பிணையில் செல்வதற்கான வாய்ப்புகள் அதிகம் இருப்பதால் சந்தேகநபர் பிணையில் விடுவிக்கப்பட்டு வீட்டிற்குச் சென்ற பிறகு அவருடன் பாதிக்கப்பட்டவர் தொடர்ச்சியாக ஒன்றாக வாழவேண்டிய நிலை ஏற்படுகின்றது.

மறுபுறத்தில் குற்றச்செயலைப் புரிந்தவருக்கு உரிய தண்டனை வழங்கப்படுவதற்கும், மீண்டும் குற்றச்செயலைப் புரிந்தால் மீண்டும் தண்டனை வழங்கப்படுவதற்கும் சட்ட ஏற்பாடுகள் இருந்தபோதும், மீண்டும் குற்றச்செயல்கள் புரியப்படாமல் இருக்கப் போதுமான ஏற்பாடுகள் இல்லை. எங்களுக்குத் தேவையானது யாதெனில் மீண்டும் குற்றச் செயல்கள் நிகழாமல் தடுப்பதாகும்.

***3) குடும்ப வன்முறை என்றால் என்ன?***

குடும்ப வன்முறை என்பது பாதிக்கப்பட்டவருக்கும் சம்பந்தப்பட்டவருக்கும் இடையேயான தனிப்பட்ட இயற்கையான தொடர்பு காரணமாக எழும் பிரச்சினையின் காரணமாக குடும்பச்சூழலினுள் அல்லது வெளியில் சம்பந்தப்பட்டவரால் செய்யப்படுகின்ற அல்லது செய்விக்கப்படுகின்ற உடல்ரீதியான அல்லது உளரீதியான பாதிப்புகளாகும்.

***4) இச்சட்டத்தின் கீழ் உடல்ரீதியான பாதிப்புக்களாக அடையாளப் படுத்தப்படுபவை எவை?***

தண்டனைச் சட்டக்கோவை அத்தியாயம் 15 இல் குறிப்பிடப்பட்டுள்ள குற்றங்களான சாதாரண காயமேற்படுத்தல், படுகாய மேற்படுத்தல், ஆட்கொலை, கொலை, கொலை முயற்சி, கருக்கலைத்தல், பலாத்காரமாக கருக கலைத்தல், சட்டவிரோதமாக சிறைப்படுத்தல், பலாத்காரமாகத் தாக்குதல், பாலியல் துன்புறுத்தல், ஆட்கடத்தல், கற்பழித்தல், முறையில்லாத புணர்ச்சி, தற்கொலை முயற்சிக்கு உதவுதல் போன்ற மனித உடலுக்கு எதிரான குற்றங்கள் குற்றரீதியாகச் சினமூட்டலும், (தண்டனை சட்டக்கோவை பிரிவு 483) பறிமுதல் செய்தல் (பிரிவு 372) ஆகிய குற்றங்களும் உள்ளடங்கும்.

***5) உளரீதியான பாதிப்பு என்றால் என்ன?***

ஆக்ரோஷமாக திட்டித் தீர்ப்பது பற்றிச் சட்டத்தில் விளக்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்டவரைப் பாரதூரமாக இயலபாக சிறுமைப்படுத்தும் அல்லது அவமானப்படுத்தும் நடவடிக்கைகளில் பாதிக்கப்பட்டவருக்குப் பாரதூரமான பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய நடவடிக்கைகளைக் குறிப்பிடலாம்.

***6) குடும்ப வன்முறையொன்றினால் பாதிக்கப்பட்ட ஒருவருக்கு இச்சட்டத்தின் கீழ் பெற்றுக்கொள்ளக் கூடிய நிவாரணங்கள் எவை?***

குடும்ப வன்முறையால் பாதிக்கப்பட்ட ஒருவர் அல்லது தனக்கு பாதிப்பு ஏற்படுத்தக் கூடிய ஒருவர் இச்சட்டத்தின் கீழ் உரிய அல்லது இயைபுடைய நீதிவான் நீதிமன்றத்திற்கு விண்ணப்பித்துக் குடும்ப வன்முறையைத் தடுப்பதற்கான பாதுகாப்புக் கட்டளையொன்றைப் பெற்றுக்கொள்ள முடியும். *(தொடரும்...)*

# மீள்குடியேறியுள்ள மக்களுக்கான உதவிகளை அரச சார்பற்ற நிறுவனங்கள் அதிகரிக்க வேண்டும்

## மீள்குடியேற்ற அமைச்சர் வேண்டுகோள்

(முல்லைத்தீவு)

மீள்குடியேற்றப்பட்டுள்ள மக்களுக்கான உதவிகளை அதிகரிக்குமாறு அமைச்சர் குணரத்ன வீரக்கோன் அரச சார்பற்ற நிறுவனங்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நேற்றுமுன்தினம் முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற விசேட கலந்துரையாடலின் போதே அமைச்சர் இவ் வேண்டுகோளை விடுத்துள்ளார்.

மீள் குடியேற்ற அமைச்சர் குணரத்ன வீரக்கோன் வடக்கிற்கான மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் பல்வேறு பிரதேசங்களுக்கும் விஜயம் செய்துள்ள அமைச்சர் அங்கு நடைபெற்றுள்ள மீள்குடியேற்றப் பணிகளைப் பார்வையிட்டாா.

அதனையடுத்து முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் மாவட்ட அரசாங்க அதிபர் பத்திநாதன், அமைச்சின் அதிகாரிகள், அரச - அரச சார்பற்ற நிறுவனங்களின் முக்கியஸ்தர்களுடனான விசேட சந்திப்பொன்றை மேற்கொண்டார். இதன் போதே அமைச்சர் மேற்படி வேண்டுகோளை விடுத்துள்ளார்.



மீள்குடியேற்றப்பட்டுள்ள மககளின் நலன்கள், அவர்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகள், மேலும் மீள்குடியேற்றப்படவுள்ள பகுதிகள் தொடர்பில் இக்கலந் துரையாடலின் போது முக்கிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, கிளிநொச்சி மாவட்டத்தில் மீள்குடியேற்றப்பட்டுள்ள 37,500 குடும்பங்களில் 30,000 பேருக்கு உடனடி உதவு தொகையான 25,000 ரூபா வழங்கப்பட்டுள்ளதாக மாவட்ட அரசாங்க அதிபர் ரூபாவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.



கிளிநொச்சி கல்வி வலயத்திற்குட்பட்ட குமாரசாமிபுரம் அ.த.க. பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு சான்றிதழ்களை கிளிநொச்சி மாவட்டமக்கள் தொடர்பு பொலிஸ் அதிகாரி சாந்த வழங்கி வைப்பதைக் கலாகாணலாம்.

# அடிப்படை வசதிகளற்ற நிலையில் சிரமப்படும் மீள்குடியேறிய மக்கள்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கடற்கரைப் பகுதியில் மீளக்குடியேறி மீனவக் குடும்பங்கள் அடிப்படைத் தேவைகள் இன்றிய நிலையில் வாழ்வாதாரத்தில் பெருமளவு கஷ்டங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இடம்பெயர்ந்து வேறு மாவட்டங்களில் தொழிலை மேற்கொண்டு வந்த நிலையில் தற்போது இங்கு மீளக்குடியமர்ந்த பின்னர் தமது தொழிலில் பெருமளவு முன்னேற்றங்கள் ஏற்படவில்லை.

இதனால் தாம் அன்றாட தேவைகளைப் பெற்றுக்கொள்வதில் பெரும் சிரமங்களுக்கு உள்ளாவதாகவும், அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவிகளும் தமக்குக் கிடைப்பதில்லை எனவும் அவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் உதவிகளை வழங்க வேண்டும் என அப் பகுதி மீனவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (40)

# தற்காலிக வீடுகளை முழுமையாக்கி மழையிலிருந்து காப்பாற்றுங்கள்

## சோஆ நிறுவனத்திடம் மக்கள் கோரிக்கை

(முரசுமோட்டை)

முல்லைத்தீவு மாவட்டத்தில் விஸ்வமடுப் பகுதியில் ம்ள்குடியேற்றம் செயயப்பட்டுள்ள மக்களுக்கு சோஆ நிறுவனத்தினால் அமைக்கப்பட்டு வந்த தற்காலிக வீடுகளுக்கான கட்டடப்பணிகள் இதுவரையும் முழுமையடையவில்லை எனவும், இதனால் தாம் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாக அப்பகுதியில் மீள்குடியமர்ந்த மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

கடந்த வருடம் ஜுலை மாதம் குறித்த பிரதேசத்தின் வள்ளுவர் கிராமத்தில் மக்கள் மீளக்குடியேற்றம் செய்யப்பட்டனர். இதனையடுத்து, இவர்களுக்கான தற்காலிக வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்கு சோஆ நிறுவனம் முன்வந்து இதற்கான பணிகளை முன்னெடுத்தது.

இந்த நிலையில் தற்போது இந்த வீடுகளில் கூரைவேலைகள் மட்டுமே பூர்த்தியாக்கப்பட்ட நிலையில் ஏனைய வேலைகள் எவையும் நடைபெறவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

தாம் இந்த வீடுகளை நம்பியே வேறு வீடுகளை அமைத்துக் கொள்ளாது கூடாரங்களிலேயே வாழ்வதாகவும், தற்போது பெய்து வரும் மழையினால் தாம் பெரிதும் பாதிக்கப்படுவதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே, இது தொடர்பாகச் சம்பந்தப்பட்ட நிறுவனம் கவனம் எடுத்து, வீடுகளை முழுமையாக அமைத்துத் தருமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (110)

# ஸ்ரீதரின் இன்றைய பலன்

(27.04.2011 – புதன்கிழமை)

**பஞ்சாங்கக் குறிப்புக்கள்**

கர வருஷம்

சித்திரை 14 ஆம் நாள்.

இராகுகாலம் 11.59–1.29, சுபநேரம் 4.29 –5.59,
நட்சத்திரம் அவிட்டம் பி.ப. 2.49 வரை,
திதி: தசமி பி.இ. 3.51 வரைக்கும்.

**இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது**

மேடம்:– காரிய அனுகூலம், பண வரவு, மேலோர் ஆசி.

ரிஷபம்:– மன மகிழ்ச்சி, பண வரவு, நல்ல செய்தி.

மிதுனம் :– யோசனை மிகுதி, பொருள் இழப்பு, மனக் குழப்பம்.

கடகம்:– முயற்சி பலிதம், காரிய சித்தி, பண வரவு.

சிம்மம்:– மனச் சஞ்சலம், மேலோர் ஆசி, வீண் செலவு.

கன்னி :– பொருள் சேரும், பணச் செலவு, காரிய சித்தி.

துலாம் :– அதிக செலவு, மன மகிழ்ச்சி, வீணான பயம்.

விருச்சிகம்:– பண வரவு, வீண் கற்பனை, காரிய சித்தி.

தனுசு:– யோசனை மிகுதி, மனச் சஞ்சலம், பண இழப்பு.

மகரம்:– மனக் குழப்பம், வீண் பயம், காரியத்தடை.

கும்பம் :– முயற்சி வெற்றி, மேலோர் ஆசி, பண வரவு.

மீனம்:– காரிய அனுகூலம், மன மகிழ்ச்சி, பணச் செலவு.

# காத்தவராயன் சிந்துநடைக் கூத்து

(தும்பளை)

வருடா வருடம் அடியார்களின் நேர்த்திக்காக கூத்துக்கள் மேடையேற்றப்படும் தும்பளை நெல்லண்டை பத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் இன்று புதன்கிழமை இரவு 8.00 மணியளவில் அடியவர் ஒருவரின் நேர்த்திக்காக 'காத்தரவராயன்' என்னும் சிந்து நடைக்கூத்து மேடையேற்றப்படவுள்ளது.

வடமராட்சிப் பகுதியில் பல நாட்டுக் கூத்துக்களை மேடையேற்றிப் புகழ்பெற்ற திகிரி வளர்பிறைக் கலாமன்றத்தினரால் இக்கூத்து மேடையேற்றப்படுவது குறிப்பிடத்தக்கது. (மா)

# எதிர்வரும் யூன் மாதமளவில் கிளிநொச்சி மாவட்ட வீதிகள் புனரமைப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டம் பரந்தன் - முல்லைத்தீவு வீதி, பரந்தன் - பூநகரி வீதி மற்றும் கிளிநொச்சி - வட்டக்கச்சி வீதி என்பனவற்றின் புனரமைப்புப் பணிகள் எதிர்வரும் யூன் மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் தெரிவித்தனர். அண்மையில் யாழ். செயலகத்தில் நடைபெற்ற யாழ். கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் இவ்வீதிகளின் நிலை குறித்தும், அதனால் மக்களுக்கு ஏற்படும் அசௌகரியங்கள் குறித்தும் பிரஸ்தாபிக்கப்பட்டது.

இதற்குப் பதிலளிக்கையிலேயே வீதி அபிவிருத்தி அதிகாரசபையினர் மேற்கண்டவாறு தெரிவித்தனர். இம் மூன்று பிரதான வீதிகளின் திருத்தங்களுக்கான மதிப்பீட்டுப் பணிகள் நிறைவடைந்து, அவற்றுக்கான நிதி ஒதுக்கீடுகள மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட் டிய வீதி அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரிகள் யூன மாதம் இதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வுள்ளதாகவும் தெரிவித்தனர்.

# சட்டவிரோதமாக மணல் ஏற்றிய இருவருக்கு அபராதம், மண்ணும் பறிமுதல்

(முரசுமோட்டை)

கிளிநொச்சி மாவட்டத்தில் அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றிவந்த இருவேறு இடங்களைச் சேர்ந்த இருவருக்கு தலா 5 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

பன்னங்கண்டி, உருத்திரபுரம் ஆகிய பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி சட்டவிரோதமாக உழவியந்திரத்தில் மணல் ஏற்றிவந்த இரு நபர்களை கிளிநொச்சிப் பொலிஸார் கைது செய்து கிளிநொச்சி நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டபோது வழக்கை விசாரித்த நீதிவான் குறித்த இருவருக்கும் தலா 5 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதித்ததுடன் தண்டம் செலுத்தத் தவறின் ஒருவாரகால சாதாரண சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டும் எனத் தீர்ப்பளித்தார்.

அத்துடன் குறித்த இருவரும் உழவியந்திரங்களில் ஏற்றிவந்த மணலைப் பறிமுதல் செய்யுமாறும் பொலிஸாருக்கு நீதிபதி உத்தரவிட்டார். (110)

# சிறுவர்களை மகிழ்ச்சிகரமாக்க பூங்காக்கள் அமைக்கவேண்டும்

(முரசுமோட்டை)

கிளிநொச்சி நகரில் எதிர்காலத்தில் நவீன வசதிகளுடன் கூடிய ஒரு சிறுவர் பூங்கா அமைக்கப்பட வேண்டும் என பலராலும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கடந்தகால யுத்தத்தினால் உடல், உள ரீதியாகப் பாதிக்கப்பட்ட சிறார்கள் அதிகளவில் வாழ்கின்றார்கள். இவர்களுக்கு ஒரு மகிழ்வான சூழ்நிலையை உருவாக்கும் வகையில் இங்கு சிறுவர் விளையாட்டு முற்றங்களோ, சிறுவர் நூலகங்களோ எதுவும் இல்லாத நிலை காணப்படுகிறது.

இதனைக் கருத்திற் கொண்டு புதிய நவீன வசதிகளுடன் கூடிய இலத்திரனியல் பூங்காவை அமைப்பதற்குப் பலரும் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

இதனைத் தொடர்ந்து கிளிநொச்சிப் பொது விளையாட்டு மைதானத்திற்கு அருகில் முன்னர் அமைந்திருந்த குமார சூரியர் பொதுச்சந்தை காணப்பட்ட வளாகத்தினுள் இப்பூங்காவை அமைப்பதற்குரிய நடவடிக்கைகளை கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலகத் திட்டமிடல் பிரிவு மற்றும் பிரதேச சபை என்பன இணைந்து மேற்கொள்வதற்குத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (110)

# தனியார் ஓய்வூதியத்திட்டத்தை அமுல்படுத்த மூன்று நிதியங்கள்

## அமைக்கப்படுமென ஜனாதிபதி அறிவிப்பு



(கொழும்பு)

**மஹிந்த சிந்தனையின் எண்ணக் கருவில் தெரிவிக்கப்பட்டிருந்த அனைவருக்கும் ஓய்வூதியத்தைப் பெற்றுக் கொடுப்போம் என்ற வாக்குறுதியை நிறைவேற்றும் முகமாக தனியார்துறை, அரசகூட்டுத்தாபனங்கள் ஓய்வூதியத் திட்டத்தை அமுல்படுத்த மூன்று நிதியங்களை உருவாக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.**

தனியார்துறை மற்றும் அரசாங்க கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு நடைமுறைப் படுத்தப்படும் இந்த ஓய்வூதியத் திட்டத்திற்காக மூன்று நிதியங்கள் அமைக்கப்படவுள்ளன.தனியார்துறை ஊழியர்களுக்கு நன்மையடையக்கூடிய வகையில் ஓய்வூதியத் திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதென்ற அரசாங்கத்தின் யோசனை குறித்து நேற்று முன்தினம் அலரிமாளிகையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தொழிற்சங்கத் தலைவர்களைச் சந்தித்த போதே இவ் வாக்குறுதியை அளித்தார்.

இந்தச் சந்திப்பின் போது தொழிற் சங்கத் தலைவர்கள் தெரிவித்த கருத்துக்களையும், யோசனைகளையும் அமைதியாக செவிமடுத்துக் கொண்டிருந்த ஜனாதிபதி தொழிற் சங்கத் தலைவர்கள் தெரிவித்த கருத்துக்களை உள்ளடக்கக்கூடிய வகையில் அரசாங்கம் விரைவில் ஓய்வூதியத் திட்டத்தை நடைமுறைப்படுத்துமென்று கூறினார்.

நிதி அமைச்சு, தொழில் அமைச்சு, தொழில் திணைக்களம் மற்றும் சட்டமா அதிபர் திணைக்களத்தின் உயரதிகாரிகள் இந்த ஓய்வூதியத் திட்டம் குறித்து தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளைச் சந்தித்து கலந்துரையாட வேண்டுமென்றும் இந்தச் சந்திப்பிற்கான திகதியை கூடிய சீக்கிரத்தில் நிர்ணயித்த பின்னர் இரு தரப்பினரும் தங்கள் கருத்துக்களையும், யோசனைகளையும் முன்வைத்துப் பேசலாம் என்று ஜனாதிபதி இந்தக் கூட்டத்தில் எடுத்துரைத்தார்.

இந்தச் சந்திப்பில் கலந்து கொண்ட தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் தனியார் துறையினரையும் உள்ளடக்கும் இந்த ஓய்வூதியத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதென்று அரசாங்கம் எடுத்த முடிவு குறித்து தங்கள் நன்றியைத் தெரிவித்தனர். இந்த ஓய்வூதியத் திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்குத் தாங்கள் பூரண ஆதரவை நல்குவோம் என்று ஜனாதிபதிக்கு உறுதி மொழி அளித்தனர்.

வலுவான நிலைத்திருக்கக்கூடிய தனியார்துறை ஊழியர்களுக்கான ஓய்வூதியத் திட்டத்தை அறிமுகம் செய்வதே தனது நோக்கமென்று தெரிவித்த ஜனாதிபதி, இந்தத் திட்டம் இடைநடுவில் கைவிடப்படாதென்றும் உறுதியளித்தார். தனியார்துறையினருக்கும் ஓய்வூதியம் பெற்றுக் கொடுப்பேன் என்று மஹிந்த சிந்தனை எண்ணக் கருவில் அளிக்கப்பட்ட இன்னுமொரு வாக்குறுதியை ஜனாதிபதி இதன்மூலம் நிறைவேற்ற உள்ளார். இந்த ஓய்வூதியத் திட்டத்தினால் வெளி நாடுகளில் பணிபுரியும் இலங்கையர்கள் மற்றும் சுய தொழிலில் ஈடுபடுபவர்களும் நன்மையடைய முடியும்.


இந்தச் சந்திப்பின்போது ஜனாதிபதி, தொழிற்சங்கத் தலைவர்கள் தனியார் ஊழியர்களுக்கான இந்த ஓய்வூதியம் பற்றிய கருத்துகள் மற்றும் யோசனைகளை எழுத்து மூலம் சமர்ப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். இந்த ஓய்வூதியத்திட்டம் உழைக்கும் வர்க்கத்தின் வலுவை அதிகரித்து அவர்களுக்கு நல்வாழ்வைப் பெற்றுக் கொடுக்குமென்றும் கூறினார்.எனவே எங்கள் நாட்டின் உழைக்கும் வர்க்கத்தினர் இந்த ஓய்வூதியத் திட்டத்திற்கு தங்களின் பூரண ஆதரவையும், ஒத்துழைப்பையும் வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

2020ஆம் ஆண்டளவில் எங்கள் நாட்டில் 60 வயதைக் கடந்த வயோதிபர்களின் எண்ணிக்கை கணிசமான அளவு அதிகரிக்கும் என்றும் அன்றைய கால கட்டத்தில் வயோதிபர்களுக்கு இத்தகைய ஓய்வூதியத் திட்டம் ஒரு வரப்பிரசாதமாக அமையு மென்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். தமது அரசாங்கம் சமீபகாலமாக தனியார் துறையை வலுப்படுத்துவதற்கு பலதரப்பட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதென்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதி அவர்களுடன் தொழிற் சங்கத் தலைவர்கள் நடத்திய பேச்சுவார்த்தைகளில் நிதியமைச்சின் செயலாளர் கலாநிதி பி.பி. ஜயசுந்தர இந்த உத்தேச ஓய்வூதியத் திட்டம் பற்றிய விபரங்களையும், ஓய்வூதிய திட்டத்தினால் ஏற்படக்கூடிய நன்மைகளையும் எங்கிருந்து இந்த நிதி பெறப்படும் என்பது பற்றியும் விளக்கிக் கூறினார்.

சுமார் 150 தொழிற்சங்கப் பிரதிநிதிகள் கலந்து கொண்ட இக்கூட்டத்தில் அமைச்சர்களான காமினி லொக்குகே, கலாநிதி சரத் அமுனுகம, டபிள்யூ. டி.ஜே. செனவிரத்ன, விமல் வீரவன்ச, பசில் ராஜபக்ஷ மற்றும் அநுர பிரியதர்ஷன யாப்பா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# ஜனாதிபதியின் குடும்பப் பெயரைச் சொல்லி மோசடியில் ஈடுபட்ட 69பேர் கைது



(கொழும்பு)

ஜனாதிபதி குடும்பத்தினரின் பெயரைப் பயன்படுத்தி பொதுமக்களை ஏமாற்றி மோசடி செய்த 69 பேரை குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிசார் கைது செய்துள்ளனர்.

அவர்களிடம் ஏமாந்த 164 பேர் தற்போதைக்கு சுமார் ஒரு கோடி ரூபா வரை இழந்துள்ளதாக குற்றத்தடுப்புப் பிரிவின் விசேட அதிகாரிகள் மேற்கொண்ட ஆரம்ப கட்ட விசாரணைகளிலிருந்து தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஜனாதிபதியின் பாரியார் ஷிராந்தி ராஜபக்ஷ, அமைச்சர் பசில் ராஜபக்ஷ பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ ஆகியோரின் பெயர்களைப் பயன்படுத்தியே அவர்கள் தங்கள் மோசடி நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளமை தெரியவந்துள்ளது.

அரசாங்கத்தின் உயர்பதவிகள், பதவியுயர்வுகள், பிரபல பாடசாலைகளில் பிள்ளைகளுக்கு அனுமதி பெற்றுக் கொடுத்தல், வெளிநாட்டு வேலைவாய்ப்பு என்பன போன்ற பல்வேறு துறைகளில் ஆசை காட்டி அவர்கள் பொதுமக்களிடம் ஏமாற்றிப் பணம் பெற்றுக் கொண்டிருந்தமை குறித்து பொலிசாருக்குத் தகவல்கள் கிடைத்திருந்தன.

அதனையடுத்து மேற்கொள்ளப்பட்ட விசேட நடவடிக்கைகளின் பலனாக சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டிருப்பவர்கள் நாட்டின் பல்வேறு பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என்பதுடன், அவர்களுக்கு எதிராக தற்போதைக்கு 38 நீதிமன்றங்களில் வழக்குகள் தொடரப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# பக்கசார்புடன் செயற்படும் மேற்குலக ஊடகங்கள்!

## ரஷ்யத் தூதுவர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

இலங்கையின் மனிதாபிமான விவகாரங்கள் தொடர்பான மேற்குலக ஊடகங்கள் வெளியிடும் கருத்துகள் பக்கச்சார்பானவை என்றும், தமது நிகழ்ச்சி நிரல் மற்றும், நோக்கங்களை அடைவதற்காக ஒருபக்கத்தின் கருத்துகளையே அவை வெளியிடுவதாகவும் கொழும்பிலுள்ள ரஷ்யத் தூதுவர் குற்றம்சாட்டியுள்ளார்.

ரஷ்யாவின் யூரி கஹாரின் விண்வெளிக்கு மேற்கொண்ட பயணத்தின் 50ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இலங்கைப் பிரதமர் ஏற்பாடு செய்திருந்த நிகழ்வு ஒன்றில் உரையாற்றும் போதே இலங்கைக்கான ரஷ்யத் தூதுவர் விளாடிமிர் மிக்கலோவ் இவ்வாறு தெரிவித்தார்.

உலகளாவிய மனிதாபிமான விவகாரங்களில் மேற்குலக ஊடகங்கள் சீரான அணுகுமுறையைக் கடைப் பிடிப்பதில்லை.

ஒரு பக்கத்தை மட்டும் அவை தெரிவு செய்து கொண்டு செய்திகளை வெளியிடுகின்றன.

அவை தமது நிகழ்ச்சிநிரல் மற்றும் நோக்கங்களை அடைவதற்காகவே அப்படி பக்கச் சார்பான அறிக்கைகளை தயாரிக்கின்றன.

இலங்கை விவகாரங்கள் தொடர்பாகவும் மேற்குலக ஊடகங்கள் அவ்



வாறான அணுகுமுறைகளையே கடைப் பிடிக்கின்றன.

முப்பதாண்டு காலப் போரினால் காயப்பட்டுள்ள இலங்கையைக் குணப்படுத்த ஐ.நா உதவ வேண்டிய பொறுப்பில் உள்ளது.

இலங்கை அரசும் அதன் படைகளும் எப்போதும் பொதுமக்களைப் பாதுகாக்கும் நடவடிக்கையிலேயே ஈடுபட்டன.

தீவிரவாதத்தினால் இலங்கை சந்தித்த பாதிப்புகளை நான் கடந்த சில ஆண்டுகளில் பார்த்துள்ளேன்.

தீவிரவாதத்தை அடியோடு இலங்கை அகற்றியது குறித்து ரஷ்யா மகிழ்ச்சியடைகிறது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் இலங்கை உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டும்

(கொழும்பு)

ஐ.நா. நிபுணர்புகுழுவில் கூறப்பட்டுள்ள இறுதிக்கட்டப் போரின்போது இடம்பெற்ற மனித உரிமைமீறல் குற்றச்சாட்டுகள் குறித்து இலங்கை அரசாங்கம் உறுதியான நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்று அமெரிக்காவின் மூத்த நாடாளுமன்ற உறுப்பினர் ஹோவார்ட் பேர்மன் கோரிக்கை விடுத்துள்ளார்.

அமெரிக்க நாடாளுமன்றத்தின் வெளிவிவகாரக் குழுவில் நேற்று முன்தினம் உரையாற்றிய போதே பராக் ஒபாமாவின் ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த உயர்நிலை பிரமுகர் ஹோவார்ட் பேர்மன் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

மனிதஉரிமை மீறல்களில் ஈடுபட்டவர்கள் தொடர்பாக எடுக்கக்கூடிய நடவடிக்கையை வெளிப்படைத்தன்மையுடனும், துரிதமாகவும் மேற்கொள்வதை இலங்கை உறுதிப்படுத்த வேண்டும்.

நிபுணர்குழுவின் அறிக்கையின் பரிந்துரைகளை ஏற்பதைவிடுத்து அரசாங்கம் எதிர்ப்புத் தெரிவிப்பது குறித்து தான் ஆழ்ந்த கவலையடைவதாகவும் ஹோவார்ட் பேர்மன் தெரிவித்தார்.

உரிமைமீறல்களில் ஈடுபட்ட எஞ்சியுள்ள புலிகளின் மீது நடவடிக்கை எடுப்பதற்கும் தான் ஆதரவு தெரிவிப்பதாகக் ,கூறியுள்ளார்.

போர்க்குற்ற மீறல்களில் ஈடுபட்டவர்கள் தொடர்பாக உண்மையான விசாரணைகளை நடத்தி அவர்களுக்குத் தண்டனை வழங்க இலங்கை அரசாங்கம் தவறினால், உறுதியான நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியாது என்றே தான் கருதுவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# விபத்துக்களை தடுக்க புதியதிட்டம் அறிமுகம்

(கொழும்பு)

நாளாந்தம் நடைபெறும் வீதி விபத்துக்களைத் தடுக்கும் வகையில் புதிய திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்த போக்குவரத்து அமைச்சுத் தீர்மானித்துள்ளது.

எதிர்வரும் மே மாதம் 11ஆம் திகதி குறித்த கொள்கை அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக வீதிப் பாதுகாப்பு தொடர்பான தேசிய சபையின் தலைவர் முன்னாள் அமைச்சர் மனோ விஜேரத்ன தெரிவித்தார்.

நாளாந்தம் இடம்பெறும் வீதி விபத்துக்கள் காரணமாக 10 பேர் உயிரிழப்பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த விபத்துக்களை குறைப்பதற்கென எதிர்வரும் மே மாதம் 11ஆம் திகதி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் வெளியிட்டு வைக்கப்படவுள்ள புதிய திட்டத்தில் 5 நிபந்தனைகள் காணப்படுவதாக மனோ விஜேரத்ன மேலும் கூறினார்.

## போதிய ஓய்வு தேவை



(லண்டன்)

போட்டித் தொடர்களுக்கு இடையில் வீரர்களுக்கு ஓய்வுதேவை. இதைக கருத்திற் கொண்டு போட்டி அட்டவணைகளைத் தயாரிக்க வேண்டும். இல்லையேல் போட்டிப் புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட வேண்டிய சூழ்நிலை உருவாகும் என இங்கிலாந்து அணி வீரர் அலெஸ்டர் குக் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது: அதிகமான போட்டிகளில் விளையாடுவதால் வீரர்கள் அடிக்கடி காயம் அடைவதுடன் மிக விரைவிலேயே விளையாட்டிலிருந்து ஓய்வுபெற வேண்டிய கட்டாயத்திற்கும் ஆளாகிறார்கள். இதைத் தவிர்க்கும் வகையில் போட்டித் தொடர்களுக்கு இடையே போதிய இடைவெளி கொடுக்க வேண்டியது அவசியம். இதைக் கவனத்தில் கொண்டு அட்டவணைகளைத் தயாரிக்க வேண்டும். இல்லையென்றால் வீரர்கள் போட்டிப் புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட நேரிடும் என்றார்.

## ஓய்வு வழங்குவதில் சிக்கல்

(மும்பை)


மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் இருந்து சச்சின், சேவாக், டோனி, சகீர்கான், ஹர்பஜன் சிங், கம்பீர் ஆகியோருக்கு ஓய்வு வழங்குவதில் இந்திய கிரிக்கெட் சபைக்கு சிக்கல் ஏற்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.

தொடர்ந்து கிரிக்கெட் ஆடி வருவதால் ஓய்வு தேவை என இவர்கள் இந்திய கிரிக்கெட் சபையிடம் கோரியிருந்தனர்.

இந்நிலையில், முழுப் பலம் வாய்ந்த இந்திய கிரிக்கெட் அணியே மேற்கிந்தியத் தீவுகளுக்கு அனுப்பப்படும் என்று இந்திய கிரிக்கெட் சபை வட்டாரங்களில் இருந்து செய்திகள் வெளியாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதன் காரணமாக ஓய்வு வழங்குவதில் சிக்கல் நிலை தோன்றியுள்ளது.

ஐ.பி.எல். போட்டிகள் முடிந்த அடுத்த வாரத்திலேயே, இந்திய அணி மேற்கிந்தியத் தீவுகளுக்குச் செல்லவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தேவையற்ற கற்பனை




கிரிக்கெட் வீரர் ஸ்ரீசாந்தைக் காதலிப்பதாக வந்த தகவலில் உண்மை இல்லை என்றார் ரியா. சென். தமிழில் தாஜ்மஹால் படத்தில் கதாநாயகியாக அறிமுகமானவர் ரியா சென்.

பின்னர் பிரசாந்துடன் குட்லக் படத்தில் நடித்த அவர் பிறகு இந்திக்குச் சென்றுவிட்டார். சமீபத்தில் இவரும் இந்திய கிரிக்கெட் வீரர் ஸ்ரீசாந்தும் சில விழாக்களில் கலந்துகொண்டனர்.

இதையடுத்து இருவரும் காதலித்து வருவதாகவும் திருமணம் செய்துகொள்ள இருப்பதாகவும் செய்திகள் வெளியாயின. இதை ஸ்ரீசாந்த் ஏற்கனவே மறுத்திருந்தார். இந்நிலையில் ரியா சென் தனது டிவிட்டர் இணையதளத்தில், கொச்சி ஐ.பி.எல். அணி பங்கேற்ற ஆட்டத்தில் நான் கலந்துகொண்டேன். இதற்காகவெல்லாம் காதல் வருமா என்ன? நான் ஸ்ரீசாந்தைக் காதலிக்கவில்லை. அது தவறான தகவல். இது தொடர்பான உங்கள் கற்பனைகளுக்கு கொஞ்சம் ஓய்வு கொடுங்கள் என்று கூறியுள்ளார்.

## சச்சினுக்குக் கௌரவம்



(மும்பை)

கிரிக்கெட் வீரர் சச்சின் டெண்டுல்கருக்கு கௌரவம் அளிக்கும்வகையில் மிகப் பெரிய விளையாட்டு அருங்காட்சியகத்தைக் கட்ட மகாராஷ்டிர அரசு முடிவு செய்துள்ளது. கிரிக்கெட்டில் சச்சின் தனது சாதனைகளால் மகாராஷ்டிராவுக்குப் பெருமை சேர்த்துள்ளார். சமீபத்திய உலகக் கிண்ணத் தொடரில் அவரது பங்களிப்பு அளவிட முடியாதது என மகாராஷ்டிர முதல்வர் பிருத்விராஜ் சவான் தெரிவித்தார்.

டெண்டுல்கரின் பெயரில் பெரிய அளவில் விளையாட்டு அருங்காட்சியகம் அமைக்க அரசு தீர்மானித்துள்ளது என சவான் குறிப்பிட்டார். 44 சிறந்த விளையாட்டு வீரர்களுக்கு மாநில அரசின் விருதுகள் வழங்கும் விழாவில் பேசும்போது சவான் இவ்வாறு தெரிவித்தார்.


## மீண்டும் வென்றது பாகிஸ்தான்

(சென் லூசியா)

மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கெதிரான இரண்டாவது ஒரு நாள் போட்டியிலும் பாகிஸ்தான் அணி ஏழு விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது. இரு அணிகளுக்குமிடையிலான ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரின் இரண்டாவது போட்டி நேற்று முன்தினம் சென் லூசியா விளையாட்டு மைானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் ஆடிய மேற்கிந்தியத்தீவுகள் அணி, நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 220 ஓட்டங்களைப் பெற்றது. இதில் எல்.எம்.பி. சிமென்ஸ் 51, எம்.என். சாமுவேல்ஸ் 29, ஜே. றோச் 24 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் மொகமட் ஹபீஸ், அப்ரிடி, வஹாப் றியாஸ், அஜ்மல் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.


பதிலுக்கு 221 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய பாகிஸ்தான் அணி, 48 ஓவர்கள் நிறைவில் மூன்று விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் மொகமட் ஷஹாட் 102, மொகமட் ஹபீஸ் 32 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தனர். ஆட்டமிழக்காது மிஸ்பா உல்-ஹக் 43 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் றோச் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். இப்போட்டியின் ஆட்டநாயகனாக மொகமட் ஷஹாட் தெரிவானார்.



இவ்வெற்றியின் மூலம் ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரில் பாகிஸ்தான் அணி 2-0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கின்றது.

இதேவேளை, இரு அணிகளுக்குமிடையிலான மூன்றாவது போட்டி நாளை நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அபாயகரமானவர்கள்



(கொல்கத்தா)

தற்போதுள்ள சர்வதேச வீரர்களில் இந்திய அணியின் சேவாக், மேற்கிந்தியத்தீவுகள் அணியின் கிறிஸ் கெய்ல், அவுஸ்ரேலிய அணியின் வோர்னர் ஆகியோர் அபாயகரமான வீரர்கள் என கொல்கத்தா அணியின் பயிற்சியாளர் வட்மோர் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது: சேவாக், கெய்ல், வோர்னர் ஆகியோர் தற்போதுள்ள சர்வதேச வீரர்களில் அபாயகரமானவர்கள். இவர்களின் விக்கெட்டை வீழ்த்தும் வரைக்கும் எதிரணிக்குப் பெரும் சிக்கல்தான்.

இந்த ஐ.பி.எல். தொடரில் சேவாக்கும், வோர்னரும் ஒரே அணியில் இடம்பெற்றுள்ளனர். சேவாக், வோர்னரை ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாகக் கொண்ட டில்லி அணிக்கு எதிரான போட்டி, எந்த அணிக்கும் எளிதாக இருக்காது. இந்நிலையில் சேவாக் அணியை, அடுத்த போட்டியில் எதிர்கொள்கிறோம். இதில் எங்களால் முடிந்த அளவுக்கு சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வெற்றிக்குப் போராடுவோம் என்றார்.


## பட்டம் வென்றார் ஜூலியா



(ஸ்டட்கார்ட்)

ஜெர்மனியில் நடந்த கிராண்ட் பிரிக்ஸ் ரென்னிஸ் தொடரின் பெண்கள் ஒற்றையர் பிரிவில் ஜூலியா ஜோர்கஸ் சம்பியன் பட்டத்தைப் பெற்றார். ஜெர்மனியில் உள்ள ஸ்டட்கார்ட் நகரில், பெண்களுக்கான கிராண்ட் பிரிக்ஸ் டென்னிஸ் தொடர் நடைபெற்றது. இதன் ஒற்றையர் பிரிவின் இறுதிப் போட்டியில் டென்மார்க்கின் கரோலின் வோஸ்னியாக்கி, ஜெர்மனியின் ஜூலியா ஜார்ஜஸ் மோதினர். இதில் வோஸ்னியாக்கியை 6-7, 3-6 என்ற நேர் செட்டில் வென்ற ஜூலியா ஜோர்கஸ் சம்பியன் பட்டத்தை வென்றார்.

## உத்தியோகபூர்வ அறிவிப்பு



(கொழும்பு)

டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் இருந்து ஓய்வுபெறப் போவதாக இலங்கை அணியின் வேகப்பந்து வீச்சாளர் லசித் மலிங்க உத்தியோகபூர்வமாக இலங்கை கிரிக்கெட் சபைக்கும் மற்றும் அணித் தெரிவாளர் குழுவிற்கும் நேற்று அறிவித்தார்.

வலது முழங்காலில் நீண்டகாலமாக ஏற்பட்டுள்ள உபாதையை கருத்திற் கொண்டே தான் இந்த முடிவை எடுத்துள்ளதாக லசித் மலிங்க அறிவித்துள்ளார்.

இங்கிலாந்து அணியுடனான டெஸ்ட் போட்டியில் விளையாடுவதை கருத்திற் கொண்டு அவரை நாடு திரும்புமாறு இலங்கை கிரிக்கெட் கோரிக்கை விடுத்திருந்த நிலையில், டெஸ்ட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறப்போவதாக லசித் மலிங்க அறிவித்துள்ளமையை ஊடகங்கள் மூலமே அறிந்து கொண்டதாகவும், கிரிக்கெட் சபையிடம் உத்தியோகபூர்வமாக அறிவிக்கவில்லையெனவும் இலங்கை கிரிக்கெட் சபை தெரிவித்திருந்தது. இந்நிலையிலேயே அவர் இந்த முடிவை நேற்று கிரிக்கெட் சபையிடம் அறிவித்துள்ளார்.

## திருப்தியில்லை



(புதுடில்லி)

முரளிதரன் சிறப்பாகச் செயற்படும் பட்சத்தில் அணி சிறப்பான வெற்றிகளைப் பெறும் என கொச்சி அணியின் தலைவர் மஹேல ஜெயவர்த்தன தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது: உலகின் முதல்தர சுழற்பந்து வீச்சாளர் என்றால் அது முரளிதரனாகத்தான் இருக்க முடியும். ஆனால், தற்போது அவர் சிறப்பாகச் செயற்படவில்லை. எங்கள் அணியின் தோல்விக்கும் இதுவும் ஒரு காரணம்தான். அவர் சிறப்பாக செயற்படுவாரேயானால், அணி சிறப்பாக வெற்றிகளைப் பெற்றுக் கொள்ளும் என்றார்.

## துடுப்பாட்ட வீரராக களமிறங்கத் தயார்



பாகிஸ்தான் அணி என்னைவிடச் சிறந்த விக்கெட் காப்பாளரைத் தேர்வு செய்தால் சிறந்த துடுப்பாட்ட வீரராக களமிறங்கத் தயாரென அந்த அணியின் வீரர் கம்ரன் அக்மல் தெரிவித்தார். மேற்கிந்தியத்தீவுகளுடனான ரி-20, ஒரு நாள் தொடர்களிலிருந்து நீக்கியமை குறித்து கருத்துத் தெரிவிக்கும்போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது: துடுப்பாட்ட வீரராகக் களமிறங்கும் பட்சத்தில் நான் நிறைய சாதிப்பேன் என்ற நம்பிக்கை உள்ளது. எந்த வரிசையிலும் களமிறங்குவதற்குத் தயாராகவே உள்ளேன்.

நடைபெற்று முடிந்த உலகக் கிண்ண நியூசிலாந்துடனான போட்டியில் அணி வீரர் றோஸ் ரெய்லரின் மூன்று பிடிகளை எடுக் கத் தவறியதை அடுத்து இன்று வரை வேதனையுடனேயே உள்ளேன். ஆனால், சிலர் அதனை மறக்காமலேயே உள்ளனர். என்னை விமர்சிக்கும் சிலர் எனது கடந்த கால செயற் பாடுகளை மறந்துவிட்டனர். நான் அணி மீது மிகுந்த அன்பு வைத்துள்ளேன்.

விக்கெட் காப்பாளர் பணியிலும், துடுப்பாட்டத்திலும் சிறப்பாகவே செயற்பட்டேன். ஆனால், தற்போது என்னைத் தேசிய அணியிலிருந்து விலக்கியுள்ளனர். எனவே, என்னைத் தேர்வாளர்கள் எந்த நிலையில் விளையாடத் தெரிவு செய்தாலும் அதற்குத் தயாராகவே உள்ளேன். பாகிஸ்தானுக்காக விளையாடிய விக்கெட் காப்பாளர்களில் நானே பெரு மளவு துடுப்பாட்ட வீரர்களை ஆட்டமிழக்கச் செய்துள்ளேன் என்றார்.

# கனடாவில் அல்கொய்தா செயற்படுவதாக அமெரிக்க கேபிள் தகவல்களில் தெரிவிப்பு



(ரொறன்ரோ)

கனடாவின் மொன்றியல் நகரில் அல்கொய்தா அமைப்பின் முக்கிய பிரிவொன்று செயற்பட்டதாகவும், அங்கிருந்தே அமெரிக்காவுக்கு எதிரான தாக்குதல்கள் திட்டமிடப்பட்டதாகவும் அமெரிக்க கேபிள் தகவல்களில் குறிப்பிடப்பட்டிருந்ததாக விக்கிலீக்ஸ் தகவல்கள் கசிந்துள்ளன.

அமெரிக்காவால் நடத்தப்பட்டு வரும் குவாண்டனாமோ சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வரும் மொரிடானியாவைச் சேர்ந்த ஒரு பயங்கரவாத சந்தேக நபர் இந்தப் பிரிவின் தலைவராகச் செயற்பட்டுள்ளார்.

மொன்றியலில் உள்ள ஒரு பள்ளிவாசலில் வைத்துத் தான் அல்கொய்தாவுக்கான ஆட்சேர்ப்பு மற்றும் பயிற்சி என்பனவும் இடம்பெற்றுள்ளன. இந்தப் பள்ளியில் மேற்படி சந்தேக நபர் ஒரு இமாமாகக் குறிப்பிட்ட சில காலம் பணியாற்றியுள்ளார.

மொஹமட் குல்த் சலாஹி என்ற இந்த நபர், 1999 நவம்பர் 26இல் ஜெர்மனியிலிருந்து மொன்றியல் வந்துள்ளார். புனித றம்ழான் மாத காலப்பகுதியில் அவர் அல் சுன்னா அல் நபவியா என்ற பள்ளியின் இமாம் ஆகியுள்ளார.

லொஸ் ஏஞ்ஜல்ஸ் விமான நிலையத்தைத் தாக்கத் திட்டமிட்ட மிலேனியம் பொம்பர் என அடையாளம் காணப்பட்ட அஹமட் ரெஸாம் என்ற சந்தேக நபரோடு தொடர்பு இருந்ததாக நம்பப்பட்ட இவர் மீது கனேடியப் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்தனர்.

லொஸ் ஏஞ்ஜல்ஸ் தாக்குதல பற்றி இவரும் முன் கூட்டியே அறிந்திருந்தார் என்பது தான் பொலிஸாருக்கு இருந்த சந்தேகமாகும். இவர் முன்னர் சோவியத் ரஷ்யாவுக்கு எதிராக ஆப்கானிஸ்தானில் போராடியவர். 39 வயதான இவர் ஒரு மின்சாரப் பொறியியலாளர்.

2001 செப்டம்பர் 11 தாக்குதலில் பங்கேற்ற இருவரை அந்தப் பணிக்குத் தெரிவு செய்து தேவையான பயிற்சிகளை வழங்கியவரும் இவரே. ஆனால இவர் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்ட போது ஆப்கானிஸ்தானில் தான் போராடியதை மட்டுமே ஒப்புக்கொண்டுள்ளார்.

ஏனைய எல்லாக் குற்றச்சாட்டுக்களையும் மறுத்துள்ளார். குறிப்பாக அல்கொய்தாவுக்கும் தனக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்று அவர் மறுத்துளளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.




# சிரியாவில் இராணுவம் சுட்டதில் 150 பேர் பலி; ஐ.நா. கண்டனம்

(டமாஸ்கஸ்)

சிரியாவில் ஜனாதிபதி பாஷார் அல்-ஆசாத்துக்கு எதிராகப் பொதுமக்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர். போராட்டத்தில் ஈடுபடுபவர்கள் மீது இராணுவம் தாக்குதல் நடத்தி வருகிறது.

இதுவரை சுமார் 150 பேர் கொல்லப்பட்டுள்ளனர். இருந்தும் போராட்டம் வலுவடைந்து வருகிறது. இதைத் தொடர்ந்து இராணுவம் தனது தாக்குதலை கடுமையாக்கியுள்ளது.

நேற்றுமுன்தினம் தலைநகர் டமாஸ்கஸ் புறநகரில் உள்ள தவுமா, அல்-மாதாமியா மற்றும் டாரா உள்ளிட்ட இடங்களில் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். அவர்களை நோக்கி டாங்கிகள் மூலம் இராணுவத்தினர் கண்மூடித்தனமாகச் சுட்டனர்.

இதனால் அதிர்ச்சி அடைந்த மக்கள் நாலாபுறமும் சிதறி ஓடினர். இருந்தும் தாக்குதல் நிறுத்தப்படவில்லை. இந்தத் தாக்குதலில் 25 பேர் உயிரிழந்தனர்.

இராணுவத்தின் இந்தக் கண்மூடித்தனமான தாக்குதலுக்கு ஐ.நா. சபையின் மனித உரிமை சபை கண்டனம் தெரிவித்துள்ளது.

மேலும் ஜோர்தான் எல்லையில் போராடும் மக்கள் மீது இராணுவத்தின் போர் விமானங்கள் குண்டுவீச்சு நடத்துகின்றன.

# லிபிய இராணுவத் தளங்கள் மீது இத்தாலி போர் விமானங்கள் மூலம் குண்டுவீசத் திட்டம்

(ரோம்)

லிபியாவில் ஜனாதிபதி கடாபிக்கு எதிராகப் போராட்டம் நடத்தி வரும் பொதுமக்கள் இராணுவத் தாக்குதல் மூலம் கொல்லப்பட்டு வருகின்றனர்.

எனவே, மக்களுக்கு ஆதரவாக அமெரிக்கத் தலைமையிலான கூட்டுப்படைகள் களம் இறங்கி உள்ளன. அமெரிக்க தலைமையிலான கூட்டுப்படையில் இங்கிலாந்து, பிரான்ஸ், இத்தாலி உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளின் இராணுவமும் உள்ளது.

அதில், இங்கிலாந்து, பிரானஸ் நாட்டு இராணுவப் போர் விமானங்கள் குண்டு வீச்சில் ஈடுபட்டு வருகின்றன. ஆனால் இத்தாலி இராணுவம் இதுவரை தாக்குதலில் ஈடுபடவில்லை.

இந்த நிலையில் இத்தாலியின் விமானப் படை போர் விமானங்களும் கடாபியின் இராணுவத் தளங்கள் மீது குண்டு வீச முடிவு செயதுள்ளன.



இது குறித்து இத்தாலிப் பிரதமர் சில்வியோ பெர்லுஸ் கோனி, அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவுடன் தொலைபேசியில் பேசினார்.

அப்போது, கடாபியின் இராணுவத் தளங்களின் மீது மட்டும் இத்தாலி போர் விமானங்கள் குண்டுவீசித் தாக்குதல் நடத்தும் என அறிவித்தார்.

ஈவு இரக்க மின்றி கொன்று குவிக்கும் கடாபி இராணுவத்திடம் இருந்து பொதுமக்களைக் காப்பாற்றவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

அதுவும் உடனடியாகக் குண்டுவீச்சு தாக்குதல் நடத்த உள்ளது. இதற்கான அறிக்கையை பிரதமர் பெர்லுஸ் கோனி அலுவலகம் நேற்றுமுன்தினம் வெளியிட்டது.

# பாகிஸ்தானில் பஸ்களில் குண்டுவெடிப்பு பத்துப் பேர் பலி, இருபது பேர் காயம்

(கராச்சி)

பாகிஸ்தானின் துறைமுக நகரமான கராச்சியில் கப்பற் படைத் தளம் உள்ளது. நேற்றுக் காலை 7.40 மணி அளவில் கப்பற்படை ஊழியர்கள் ஒரு பஸ்சில் பணிக்கு புறப்பட்டுச் சென்றனர். கராச்சியில் உள்ள சந்தைப் பகுதியில் சென்றபோது அந்த பஸ்சில் திடீரென குண்டு வெடித்தது.

இதனால் பஸ் வெடித்துச் சிதறியது. அந்த, பஸ்சில் பயணம் செய்த 15 பேர் காயம் அடைந்தனர். குண்டுவெடிப்பில், பஸ்சின் அருகே சென்று கொண்டிருந்த பல கார்களும் சேதம் அடைந்தன. சம்பவம் நடந்த இடத்தின் அருகே இருந்த வீடுகளும் இடிந்தன.

இந்நிலையில், கப்பற்படை ஊழியர்களை ஏற்றிச்சென்ற மற்றொரு பஸ் பால்டியா நகரம் அருகே சென்றபோது இதே போன்று குண்டு வெடித்தது. 5 பேர் காயம் அடைந்தனர். இந்த 2 குண்டு வெடிப்பு சம்பவங்களில் 10 பேர் பலியாகினர்.


முதல் குண்டுவெடிப்புச் சம்பவம் நடந்த 10 நிமிடத்தில் 2ஆவது குண்டுவெடிப்புச் சம்பவம் நடந்துள்ளது. இது எப்படி நடந்தது எனத் தெரியவில்லை எனப் பொலிசார் தெரிவித்தனர். இது தற்கொலைத்தாக்குதலாக இருக்கலாம். ஏனெனில் குண்டுவெடிப்பு நிகழ்ந்த 2 பஸ்களின் அருகே மோட்டார் சைக்கிள்கள் சிதறிக்கிடந்தன.

எனவே, வெடிகுண்டு நிரப்பிய மோட்டார் சைக்கிளுடன் வந்த தீவிரவாதிகள் பஸ்சில் மோதித் தற்கொலை தாக்குதல் நடத்தியிருக்கலாம் என்றும் சந்தேகிக்கப்படுகிறது. இச்சம்பவம் கராச்சி மக்களிடையே பீதியைக் கிளப்பியுள்ளது.

# சுவிஸில் 75 ஆண்டுக்குப் பின் மலர்ந்த பிண நாற்றமுடைய இராட்சத மலர்

(சூரிச்)

சுவிட்ஸர்லாந்தில் கடந்த 75 வருடகாலப் பகுதியில் முதல் தடவையாக மலர்ந்த பிண நாற்றம் வீசும் இராட்சத மலரைக் காண பல்லாயிரக்கணக்கான மக்கள் பாஸல் நகரிலுள்ள தாவரவியல் பூங்காவில் சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் கூடினர்.




அமோபோபல்லஸ் டைட்டானியம் என்ற விஞ்ஞானப் பெயரையுடைய இந்தப் பூவின் உயரம் 6.6 அடியாகும்.

உலகளாவிய ரீதியில் செயற்கை மரச் செய்கை மூலம் இத் தாவரத்தின் 134 பூக்கள் மட்டுமே இதுவரை மலர்ந்துள்ளதாகப் பதிவாகியுள்ளது.

கடந்த மார்ச் மாதம் அரும்பாகத் தோன்றிய இந்த மலர், நாளுக்கு சுமார் 6 சென்ரிமீற்றர் வீதம் வளர ஆரம்பித்தது. இந்த மலரின் தாய்த் தாவரமானது 1992 ஆம் ஆண்டு பிராங்போர்ட் பாம் பூங்காவில் மலர்ந்தது. இந்தோனேசியாவின் சுமாத்ரா தீவிலுள்ள மழைக காடுகளை அடிப்படையாகக் கொண்ட இந்த மலர், மிகவும் அழகாக மலர்வது குறிப்பிடத்தக்கது.

# எல்லைக் கோயில் பிரச்சினையில் தாய்லாந்து-கம்போடியா மோதல்

## சம்பவத்தில் 12 இராணுவ வீரர்கள் பலி



(நாங் கன்னா)

கம்போடியா மற்றும் தாய்லாந்து நாடுகளுக்கு இடையே காட்டுப்பகுதியில் புராதன பழமையான 2 கோவில்கள் உள்ளன. இங்கு ஏராளமான சுற்றுலாப் பயணிகள் வந்து செலகின்றனர்.

எனவே, இருநாடுகளும் அந்த கோவில்கள் தங்களுக்குத்தான் எனச் சொந்தம் கொணடாடி வருகின்றனர். இது எல்லைப்பிரச்சினையாக மாறி இரு நாடுகளுக்கும் இடையே மோதலை ஏற்படுத்தியுள்ளது.

இதைத் தொடர்ந்து கடந்த பெப்ரவரி மாதம் முதல் அவர்களுக்கு இடையே ஐ.நா. பாதுகாப்புச்சபை மூலம் போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டது.

நேற்றுமுன்தினம் போர் நிறுத்த ஒப்பந்தம் மீறப்பட்டது. இதைத் தொடர்ந்து இருநாட்டு இராணுவ வீரர்களும் துப்பாக்கிச் சண்டையில் ஈடுபட்டனர். அதில், இருதரப்பையும் சேர்ந்த 12 இராணுவ வீரர்கள் பலியானார்கள்.

மேலும் 2 நாட்டு எல்லையில் உள்ள ஆயிரக்கணக்கான கிராம மக்கள் தங்கள் வீடுகளைவிட்டு வெளியேறி பாதுகாப்பான இடங்களில் தஞ்சம் அடைந்துள்ளனர்.

# ஏரியில் படகு கவிழ்ந்து 38 பேர் பலி

ஆபிரிக்க நாடான காங்கோ நாட்டில் உள்ள ஏரியில் படகு கவிழ்ந்த வி..த்தில் 38 பேர் பலியாயினர்.

காங்கோ குடியரசு நாட்டில் உள்ள புகாவோவ் மாகாணத்திலிருந்து 70 கி.மீ தொலைவில் உள்ள நெட்டாலி ஜீசா தீவு வழியாக 100 பேருடன் படகு சென்று கொண்டிருந்தது.

மினோவா நகரிலிருந்து வடக்கே கூம்மா பகுதிக்கு வந்து கொண்டிருந்த போது திடீரென படகு கவிழ்ந்து விபத்திற்குள்ளானது. இதில் 38 பேர் பலியானதாகவும், மேலும் பலரை செஞ்சிலுவைச் சங்கத்தின் மீட்புப் படையினர் தேடி வருவதாகவும் கூறப்படுகிறது.

மேலும் சரியாக பராமரிக்கப்படாத கப்பல் என்பதாலும், பயணிகளுடன் அதிகளவு சரக்குகளையும் ஏற்றிச் சென்றதால் இந்த விபத்து நிகழ்ந்ததாகவும் செஞ்சிலுவைச் சங்கத்தின் உயர் அதிகாரிகள் தெரிவித்தனர்.

# குற்றப் பத்திரிகைகளில் கனிமொழியின் பெயர் தி.மு.க. - காங்கிரஸ் உறவைப் பாதிக்காது

## காங்கிரஸ் செய்தித் தொடர்பாளர் மனீஸ் திவாரி அறிவிப்பு

(புதுடில்லி)

ஸ்பெக்ட்ரம் வழக்கில் 2ஆவது குற்றப்பத்திரிகையை சி.பி.ஐ. தாக்கல் செய்து இருக்கிறது. இதில் கனிமொழி எம்.பி. பெயர் சேர்க்கப்பட்டுள்ளது. இதனால் தி.மு.க.-காங்கிரஸ் உறவு பாதிக்கப்படுமா என்று டில்லியில், காங்கிரஸ் செய்தி தொடர்பாளர் மனீஸ் திவாரியிடம் கேட்கப்பட்டபோது. அதற்குப் பதில் அளித்து அவர் கூறியதாவது:-

2ஜி ஸ்பெக்ட்ரம் முறைகேடு தொடர்பான சி.பி.ஐ. விசாரணைக்கும் தி.மு.க.- காங்கிரஸ் கூட்டணிக்கும் எந்தவித தொடர்பும் இல்லை. இந்த வழக்கை உயர் நீதிமன்றம் மேற்பார்வையில் சி.பி.ஐ. விசாரித்து வருகிறது.

இந்த விசாரணையில், மத்திய அரசு எந்தக் காலகட்டத்திலும் தலையிடவில்லை. சி.பி.ஐ. சுதந்திரமாக செயற்பட்டு வருகிறது. அதற்கும் அரசியல் கூட்டணிக்கும் தொடர்பு இல்லை. அரசியலில் சரியான சூழ்நிலைதான் கூட்டணியை நிர்ணயிக்கிறது.

குற்றப்பத்திரிகையில் கனிமொழி பெயர் சேர்க்கப்பட்டுள்ளதால் தி.மு.க.வுடன் உள்ள உறவில் பாதிப்பு இல்லை. எனவே தி.மு.க.-காங்கிரஸ் கூட்டணி தொடரும். 2006 ஆம் ஆண்டு தமிழக சட்டசபை தேர்தலையும், 2009ஆம் ஆண்டு நடந்த நாடாளுமன்றத் தேர்தலையும் தி.மு.க.வுடன் கூட்டணி சேர்ந்து சந்தித்தோம். இரண்டு தேர்தலிலும் எங்கள் கூட்டணி மாபெரும் வெற்றி பெற்றது.

இப்போது 2011ஆம் ஆண்டு தமிழக சட்டசபைத் தேர்தலையும கூட்டணி அமைத்து சந்தித்து இருக்கிறோம். இந்தத் தேர்தலிலும் தி.மு.க.-காங்கிரஸ் கூட்டணி அமோக வெற்றி பெற்று ஆட்சியை அமைக்கும் என்ற நம்பிக்கை இருக்கிறது.



துணைக் குற்றப்பத்திரிகையில் கனிமொழி பெயர் சேர்க்கப்பட்டுள்ளதால் அவரைக் கைது செய்ய முடியாது. முறைகேடு நடந்ததில் அவருக்குப் பங்கு உண்டா என்பதை நீதிமன்றம் ஆய்வு செய்த பிறகு சட்டப்படி தான் எதுவும் செய்ய முடியும் எனத் தெரிவித்தார்.

# அடுத்த தமிழகத்தின் முதல்வராக ஜெயலலிதா உள்ளூராட்சியை கலைக்க கையெடுத்திடுவார்

## தமிழக பா.ஜ.க.தலைவர் தெரிவிப்பு

(சென்னை)

சட்டசபைத் தேர்தலில் அ.தி.மு.க. கூட்டணி வெற்றி பெற்று ஜெயலலிதா முதல்வராவார் என்பதே பெரும் பாலானோரின் கருத்தாக உள்ளது எனத் தமிழக பா.ஜ.க. தலைவர் பொன். ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

தூத்துக்குடியில் நேற்றுமுன்தினம், சட்டசபை தேர்தல், நடக்கவுள்ள உள்ளூராட்சி தேர்தல் குறித்து பா.ஜ.க மாவட்ட நிர்வாகிகளின் ஆலோசனைக் கூட்டம் மாவட்ட தலைவர் கனகராஜ் தலைமையில் நடந்தது.

அக்கட்சி மாநிலத் தலைவர் பொன்.ராதாகிருஷ்ணன், நம் கட்சியில் சட்டசபைத் தேர்தலுக்கான வேட்பாளர் தேர்வில் கட்டுப்பாடு இல்லை. மாறாக போட்டியிடப் பலர் தயாராக இல்லை என்பதே உண்மை.

இத்தேர்தலில் அ.தி.மு.க. கூட்டணி வெற்றி பெற்று ஜெயலலிதா முதல்வராவார் என்பதே பெரும்பாலானோரின் கருத்து. தான் ஆட்சிக்கு வந்ததும் உள்ளூராட்சி மன்றங்களை கலைக்கும் உத்தரவில் முதல் கையெழுத்திடுவேன் என மூன்று ஆண்டிற்கு முன் ஜெயலலிதா தெரிவித்திருந்தார்.

அவர் சொன்னதை செய்யாமல்விடமாட்டார். இதன்படி ஜெயலலிதா மே 17 இல் பதவியேற்றதும் அந்த உத்தரவில் முதல் கையெழுத்திடலாம்.

அதனால் உள்ளூராட்சித் தேர்தல் விரைவில் வரலாம் என்று தெரிவித்துள்ளார்.

# திருமாவளவனுக்கு சிதம்பரம் நீதிமன்றம் பிடியாணை உத்தரவு பிறப்பித்துள்ளது

(சிதம்பரம்)

கடலூர் மாவட்டம் சேத்தியாதோப்பு அருகே உள்ள குமாரகுடியில் கடந்த 1997ஆம் ஆண்டு அம்பேத்கார் பிறந்த நாள் விழா பொதுக்கூட்டம் நடந்தது.

இதில் விடுதலைச் சிறுத்தைக் கட்சி தலைவர் திருமாவளவன் அரசுக்கு எதிராகவும், வன்முறை மற்றும் இருபிரிவினர் இடையே கலவரத்தைத் தூண்டும் வகையில் பேசியதாகவும் சேத்தியாத் தோப்புப் பொலிசார் வழக்குப்பதிவு செய்தனர்.

பின்பு சோழநத்தம் பொலிசுக்கு மாற்றப்பட்ட இந்த வழக்கின் விசாரணை சிதம்பரம் உதவி நீதிமன்றில் நடந்து வரு கிறது.

இந்த வழக்கில், கடந்த மார்ச 16 ஆம் திகதி நீதிமன்றில்



ஆஜராக திருமாவளவனுக்கு கட்டளை அனுப்பப்பட்டது. ஆனால் அவர் ஆஜராகவில்லை.

இந்த வழக்கு விசாரணை மீண்டும் நீதிமன்றுக்கு நேற்று முன்தினம் வந்தது.

இந்த வழக்கின் விசாரணையை வருகின்ற 30 ஆம் திகதிக்கு நீதிபதி திருநாவுக்கரசு ஒத்தி வைத்ததுடன், நீதிமன்றத்தில் ஆஜராகாத திருமாவளவனுக்கு பிடியாணையும் பிறப்பித்தார்.




# பட்டியலில் தயாளு பெயரைச் சேர்க்காதது ஏன்?

## சி.ஐ.பி. விளக்கம்


(புதுடில்லி)

2ஜி ஸ்பெக்ட்ரம் வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட துணைக் குற்றப்பத்திரிகையில் முதல்வரின் மனைவி தயாளு அம்மாளின் பெயர் குற்றம் சாட்டப்பட்டோர் வரிசையில் சேர்க்கப்படாதது குறித்து சி.பி.ஐ விளக்கமளித்துள்ளது.

2ஜி ஸ்பெக்ட்ரம் வழக்கில் சி.பி.ஐ சார்பில் சிறப்பு நீதிமன்றத்தில் துணைக் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப் பட்டது. இதில் கலைஞர் ரி.வி.யின் பங்குதாரர் களான கனிமொழி எம்.பி., சரத்குமார் ரெட்டி ஆகியோரின் பெயர் குற்றம்சாட்டப்பட்டோர் வரிசையில் இடம்பெற்றிருக்கிறது.

ஆனால் கலைஞர் ரி.வி.யில் 60 சதவீதப் பங்குகளை வைத்திருக்கும் தயாளு அம்மாளின் பெயர் சேர்க்கப்படாதது குறித்து கேள்வி எழுந்தது. இதற்குக் குற்றப்பத்திரிகையிலேயே சி.பி.ஐ விளக்கம் அளித்திருக்கிறது.

கலைஞர் ரி.வி.யில் தயாளு அம்மாள் பெரும்பான்மை பங்குகளை வைத்திருந்தாலும்,



நிறுவனத்தின் செயல்பாடுகளிலும், பணிகளிலும் அவருக்குப் பங்கில்லை. அவர் ஒரு செயற்படாத பங்குதாரராகவே இருந்திருக்கிறார் என சி.பி.ஐ. தெரிவித்திருக்கிறது.

# மதுரையில் இளம் பெண் வெட்டிக் கொலை துண்டுதுண்டாக வெட்டி பெட்டியில் வைத்தனர்



(மதுரை)

இளம் பெண்ணொருவரை வெட்டிக்கொலை செய்து அவரது உடலை துண்டுதுண்டாக வெட்டிப் பெட்டியில் அடைத்த கொடூரச் சம்பவம் ஒன்று மதுரையில் இடம் பெற்றுள்ளது.

மதுரை விராட்டிபத்து இருளாண்டித்தேவர் கொலனியைச் சேர்ந்த கிருஷ்ணன். என்பவரின் மகள் லதா (23 வயது) என்ற பெண்ணே இவ்வாறு கொலை செய்யப்பட்டவராவார்.

குறித்த பெண், ஒரு மருந்துக் கடையில் வேலை பார்த்து வந்தார். இவருக்கும் கணனி நிறுவனத்தில் வேலை பார்த்து வந்த குணசேகரனுக்கும் கடந்த 2 வருடத்திற்கு முன்பு திருமணம் நடந்தது. இவர்களுக்கு பல மாதங்களுக்கு முன்பு குழந்தை பிறந்து இறந்தது.

இந் நிலையில் மருந்துக் கடைக்கு கடந்த 20ஆம் திகதி வேலைக்கு சென்ற லதா வீடு திரும்பவில்லை. பல இடங்களில் தேடியும் அவ ரைக் கண்டுபிடிக்க முடியவில்லை. இதுகுறித்து குணசேகரன், லதாவின் அண்ணன்மார் ஆகியோர் எஸ்.எஸ். கொலனி பொலிசில் புகார் செய்தனர். இதைத் தொடர்ந்து பொலிசாரும் தேடி வந்தனர்.

இந்நிலையில் மதுரை - தேனி பிரதான வீதியிலுள்ள சோதனை நிலையத்திற்கு அருகேயுள்ள கால்வாயில்.ஒரு பெட்டி கிடப்பதாகவும், அதில் இருந்து பிணவாடை வீசுவதாகவும் அந்த வழியாகச் சென்ற பொதுமக்கள் பொலிஸில் தெரிவித்தனர். இதைத் தொடர்ந்து சோதனை நிலையத்தில் இருந்த பொலிசார் சம்பவ இடத்திற்குச் சென்று பார்த்தபோது பெட்டியில் ஒரு பெண் பிணத்தின் கால் வெளியே நீட்டிக் கொண்டிருந்தது தெரிய வந்தது.

இது குறித்து எஸ்.எஸ்.கொலனிப் பொலிசாருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டதும் பொலிஸ் அத்தியட்சகர் முருகதாஸ் மற்றும் பொலிசார் சம்பவ இடத்திற்குச் சென்று பெட்டியைக் கைப்பற்றித் திறந்து பார்த்தனர். அதில் 23 வயது மதிக்கத்தக்க இளம் பெண் வெட்டி கொலை செய்யப்பட்டு, பிணத்தை மடக்கி வைத்து பூட்டியிருந்தது தெரியவந்தது.

அந்த பெண் சல்வார் அணிந்திருந்தார். இதைத் தொடர்ந்து கடந்த வாரம் காணாமல் போன லதாவின் உறவினர்களைப் பொலிசார் அழைத்துச் சென்று பார்த்த போது அது காணாமல் போன லதா தான் எனத் தெரியவந்தது.

பிணத்தைப் பொலிசார் கைப்பற்றி பிரேதப் பரிசோதனைக்காக மதுரை அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்து விசாரணை நடத்தி வருகிறார்கள்.

லதாவை ஒன்றுக்கு மேற்பட்ட மர்ம மனிதர்கள் கடத்திக் கொலை செய்து இருக்கலாம் எனப் பொலிசார் கருதுகிறார்கள். மேலும் குடும்பத்தில் ஏதும் பிரச்சினையால் கொலை நடந்ததா, என்ற கோணத்திலும் பொலிசார் விசாரணை நடத்தி வருகிறார்கள்.

இந்த இளம்பெண் கொலை தொடர்பான விசாரணையை மேற்கொள்ள பொலிஸ் அத்தியட்சகர் முருகதாஸ் தலைமையில் ஒரு தனிப்படையும், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் தலைமையில் 2 தனிப்படையும் அமைக்கப்பட்டு உள்ளது.

இவர்கள் தேனி, திண்டுக்கல், சிவ கங்கை ஆகிய மாவட்டங்களுக்கும் சென்று விசாரணை நடத்தி வருகிறார்கள். லதா வேலை பார்த்த மருந்துக் கடையிலும் மற்றும் உறவினர்களிடமும் விசாரணை நடந்து வருகிறது.

# விமான நிலையத்தில் அழுகிய நிலையில் பாதுகாப்பு ஊழியரின் சடலம் கண்டுபிடிப்பு

(சென்னை)

சென்னை மீனம்பாக்கம் பழைய விமான நிலையத்தில் முக்கிய பிரமுகர்கள் செல்லும் பாதை உள்ளது. இதன் அருகே தனியார் விமான நிறுவனத்தின் சரக்குப்பிரிவு உள்ளது.

இங்கு தனியார் பாதுகாவலர் நிறுவனத்தின் ஊழியர்கள் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர். நேற்றுமுன்தினம் இந்தப் பகுதியில் இருந்து துர்நாற்றம் வீசியது.

உடனே பாதுகாப்பு ஊழியர்கள் தங்கி இருக்கும் பகுதிக்கு சென்றுபார்த்த போது அங்கு பாதுகாப்பு ஊழியர் ஒருவர் அழுகிய நிலையில் பிணமாகக் கிடந்தார்.

இது பற்றி உடனே விமான நிலையப் பொலிஸாருக்குத் தகவல் தரப்பட்டது. மீனம்பாக்கம் பொலிஸ் உதவி அத்தியட்சகர் கண்ணபிரான், பொலிஸ் அத்தியட்சகர் ஆரோக்கிய ரவீந்திரன் மற்றும் பொலிசார் அங்கு சென்று விசாரணை மேற்கொண்டனர்.

அதில் கடந்த 20 ஆம் திகதி பாதுகாப்புப் பணிக்கு சிவகங்கை மாவட்டம் இளையான்குடியைச் சேர்ந்த சாத்தையா (வயது 75) என்பவர் வந்ததாகவும், அதன் பிறகு பணியை மாற்ற யாரும் வரவில்லை என்றும் தெரியவந்தது.

அவர் குடிபோதையில் இறந்து இருக்கலாம் என்று கூறப்படுகிறது. விமான நிலையப் பொலிசார் உடலைப் பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர்.

# அமைதிப்படையை வெளியேற்றுவதில் வெற்றிகண்ட பிரேமதாசா தனக்கு சவப்பெட்டியையும் தயார் செய்தார்



இலங்கை - இந்திய உடன்படிக்கை வடகிழக்கு மாகாணம் என்னும் பெயரில் ஒரு மாகாணத்தினைக் குறிப்பிட்டும் ஏனைய ஏழு மாகாணங்களை தனித்தனி மாகாணங்களென அங்கீகரித்தும் மத்திய அரசின்கீழ் குவிக்கப்பட்டிருந்த அதிகாரங்கள் சிலவற்றினை அனைத்து மாகாணங்களுக்கும் பகிர்ந்தளிப்பதற்காக உருவாக்கப்படதே மாகாண சபை நடைமுறையும், அதன் 13 ஆவது திருத்தச்சட்டமுமாகும். அவ்விணைப்பினை 1987 நவம்பர் 14 ஆம் திகதி உயர்நீதிமன்றம் உறுதிப்படுத்தியது. அதற்கமைய 491 இன் 10ஆம் இலக்க விசேட வர்த்தமானிமூலம் 26.01.1988ஆம் திகதி முதல் இத்திருத்தங்கள் செயற்படுத்தப்படுமென ஜனாதிபதி திரு ஜே.ஆர் ஜயவர்த்தனா அறிவித்திருந்தார்.

குறிப்பு 1987 நவம்பர் 14 ஆம் திகதி உயர்நீதிமன்றத்தினால் உறுதிப்படுத்தப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட மாகாண சபை முறைமையின்கீழ் உருவாக்கப்பட்ட வடகிழக்கு மாகாணம் என்னும் சொற்பதத்தினை உள்ளடக்கிய மாகாணசபை 16.10.2006இல் அதே நீதிமன்றத்தின் தீர்ப்பிற்கமைய செல்லுபடியற்றதாக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கதாகும்.

வடகிழக்கு மாகாணமென மேலே குறிப்பிடப்பட்டுள்ள மாகாண அமைப்பு முறை சில நிபந்தனைகளுக்கு அமையவே நடைமுறைப்படுத்தப்படும் என்பதும் உடன்படிக்கையில் தெளிவுபடுத்தப்பட்டிருந்தது. அதாவது 1987 ஆம் ஆண்டு யூலை மாதம் 29 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கைக்கமைய 1988 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் கிழக்கு மாகாணத்தில் சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றினை நடாத்தி அம்மாகாணத்தில் வாழும் வாக்காளர்களில் பெரும்பான்மையானவர்கள் இணைப்பினை ஏற்றுக்கொள்ளும் பட்சத்திலேயே வடகிழக்கு மாகாணம் என்னும் சொற்பிரயோகம் உறுதிப்படுத்தப்படுவதுடன் அவ்விணைப்பு செல்லுபடியானதாகும் என்பதும் சந்தேகத்திற்கிடமின்றி வலியுறுத்தப்பட்டிருந்தது. மாகாண சபை மூலம் தமது நிர்வாக அரசியல் அதிகாரத்தை வடக்கு கிழக்கில் பயன்படுத்துவதை இலங்கை மக்கள் தமது மாகாணத்தை தேர்தல் மூலம் செயற்படுத்தும் மக்கள் உரிமை பிரயோகம் தடுக்கப்படுகிறது. சர்வஜன வாக்கெடுப்பு நிபந்தனைகள் மீறப்பட்டுவிட்டன. அவை சட்டவலு அற்றுவிட்டன என்ற மனித உரிமை அரசியல் உரிமை மறுப்பு அடிப்படையில் கொண்டுவரப்பட்ட வழக்கின் மூலம் வெளிப்படையாகவே நியாயமாகத் தோன்றும் வாதத்தின் அடிப்படையிலே வட கிழக்கு இணைப்பு நீக்கம் செய்யப்பட்டது.)

இந்நிலையில் மேற்கூறிய வாக்கெடுப்பு ஒன்றினை நடத்தவிடாது பிரபாகரன் தலைமையிலான பயங்கரவாதிகள் நடவடிக்கைகளை முடுக்கிவிட்ட நிலையில் மாகாண சபையின் நிர்வாகத்திற்கான தேர்தல் 19.11.1988 இடம்பெற்றது. ஆனால் மேற்படி சபைக்கான நிர்வாகத்தினரை தெரிவு செய்வதற்கான நடவடிக்கைகள் வடமாகாணத்தில் பயங்கரவாதிகளால் தடுத்து நிறுத்தப்பட்டதற்கமைய அங்கு தேர்தல் இடம்பெறாதநிலையில் கிழக்கு மாகாணத்தில் மட்டுமே தேர்தலின் மூலம் உறுப்பினர்கள் தெரிவானார்கள். அதற்கமைய மாகாணசபையின் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.



மாகாண சபையின் நிர்வாகத்திற்கான தேர்தல் நடாத்தப்பட்டு ஒரு மாதகால இடைவெளியில் ஜனாதிபதித் தேர்தல் இடம்பெற்றது (19.12.1988)ல் நடாத்தப்பட்டு பிரேமதாசா அவர்கள் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டதற்கமைய (02.01.1989) ல் அவர் தமது பதவியினை பொறுப்பேற்றார். பதவியினை ஏற்ற பிரேமதாசா அவர்கள் பொதுத் தேர்தலுக்கான அறிவிப்பினை (15.02.1989) என அறிவித்ததற்கமைய வடக்கு,கிழக்கு தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் இடம்பெற்ற தேர்தல் அமைதியான முறையிலும் வடக்கு, கிழக்கில் பயங்கரவாதிகளின் நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டிருந்தமையாலும் பிரதானமாக வடக்கில் பயங்கரவாதிகளின் அனுசரணையுடன் (ஈரோஸ்) அமைப்பினர் மட்டுமே வாக்காளர்களின் வாக்குகளைத் தாமாகவே பிரயோகித்து அங்கு (9) பிரதிநிதிகளை தமதாக்கினார்கள்.

தமிழர் விடுதலைக் கூட்டணியினர் (1989) தேர்தலில் படு தோல்வியைத் தழுவியதற்கமைய புலி ஆதரவு உறுப்பினர்கள் 11பேர் பாராளுமன்றத்தினுள் நுழைவதற்கான வாய்ப்புக்கள் உருவானது. இந்நிலையிலேயே பயங்கரவாதிகளை தமது நண்பர்களாக அரவணைப்பதன்மூலம் இலங்கை-இந்திய உடன்படிக்கையை ரத்துச்செய்வதற்கும், இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வருகைதந்திருந்த இந்திய அமைதி காக்கும் படையினரையும் இலங்கையைவிட்டு வெளியேற்றமுடியுமென ஜனாதிபதியான பிரேமதாசா கனவு கண்டார். அதற்கமைய பயங்கரவாதிகளுக்கு நேசக்கரம் நீட்டிய பிரேமதாசாவின் அழைப்பு பயங்கரவாதிகளால் வரவேற்கப்பட்டு அதற்கான உடன்படிக்கை ஒன்றும் (26.04.1989ல்) பிரேமதாசாவின் அரசாங்கத்திற்கும், பயங்கரவாதிகளுக்குமிடையில் கைச்சாத்தானது. அதற்கான பரிசாக பிரேமதாசா 20 மில்லியன் ரூபா பணம், 500 ரீ 56 மெசின்கண்,500 ஏ.கே 47,5000கிரனைட், 200,000 துப்பாக்கி ரவைகள், 20ஜீப் வண்டிகள்,200பைக்கற் சீமெந்து போன்றவற்றினை அன்பளிப்புச் செய்தார்.

மேற்படி அன்பளிப்புப் பொருட்கள் இந்திய அமைதிகாக்கும் படையினரை இலங்கையிலிருந்து வெளியேற்றுவதற்காக வழங்கப்பட்டவையே! அதனால் பிரேமதாசாவின் இந்திய அமைதி காக்கும் படையினரை வெளியேற்றும் திட்டம், வெற்றிகண்ட நிலையில் பிரேமதாசாவிற்குமான சவப்பெட்டியையும் எற்கனவே தயார்செய்து வைத்திருந்த பயங்கரவாதிகள் அதனையும் வெற்றிகண்டார்கள்.

தமது கட்சியினைச் சார்ந்த ஜனாதிபதியும் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களான காமினி திசாநாயக்கா,அத்துலதமுதலி,சிறில் மத்யூ,ரஞ்சன் விஜேரத்னா, போன்றோரை பயங்கரவாதிகள் படுகொலை செய்த நிலையிலேயே மேற்குலக ஏகாதிபத்தியங்களின் வலையில் சிக்கிய ரணில் விக்கிரம சிங்கா மீண்டும் அதே பயங்கரவாதிகளுடன் 22.02.2002ல் மீண்டுமொரு உடன்படிக்கையினை கைச்சாத்திட்டு இலங்கையின் இறைமையினை புலிகளுக்கு தாரை வார்த்துக் கொடுத்தார். அதற்கமைய இலங்கைத்தீவின் முழுமையான நிலப்பரப்பில் (41%) நிலப்பரப்பினையும், (53%)மான கடல் பிராந்தியத்தினையும் தாரைவார்த்துக் கொடுத்ததன்மூலம் ஜனாதிபதிக்கான ஆசனத்தில் அமர முடியுமென கனவு கண்ட ஐ.தே.கட்சியினர் படுதோல்வியினைச் சந்தித்தனர். இந்நிலையிலேயே மூன்று ஜனாதிபதிகளால் புலியின் நகத்தினைக்கூட பிடுக்க முடியாதிருந்த நிலையில் இன்றைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பயங்கரவாதிகளின் வரலாற்றினை இலங்கை மண்ணிலிருந்து முழுமையாக துடைத்தெறிந்ததுடன் பயங்கரவாத ஒழிப்பில் உலக கதாநாயகனாகவும் இன்று பாராட்டப்படுகின்றார்.

இலங்கையில் பயங்கரவாதம் தலைவிரித்தாடியபோது பயங்கரவாதிகளின் செயற்பாடுகளை அதாவது, கொலை, கொள்ளை, கப்பம் அறவிடுதல், யாழ் மக்கள் வெளி நகரங்களுக்கு செல்வதாயின் அதற்கான பாஸ் பெறவேண்டிய அறிவுறுத்தல் போன்றவை அனைத்தினையும் நியாயமானது போல் தத்தமது பத்திரிகைகளிலும், இலத்திரனியல் ஊடகங்களிலும் வெளியிட்டதன் மூலம் புலிகளிடமிருந்து கோடிக்கணக்கான ரூபாய்களை பெற்றவர்களும்,அவர்களுக்காக ஆதரவுக் கட்டுரைகளை வரைந்தவர்களுமே இன்று மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்தினை பதவியிலிருந்து அகற்றுவதற்கான நடவடிக்கைகளை (குடும்ப ஆட்சி, சர்வாதிகாரம்,ஊடக அடக்கு முறை) என்னும் புதிய கண்டுபிடிப்புக்களை வெளிக்காட்டி மேற்குலக ஏகாதிபத்தியங்கள் சிலவற்றின் இலங்கை மீதான ஆக்கிரமிப்பிற்கு துணை போகின்றார்கள்.

இந்நிலையில் தாய் நாட்டிற்கு எதிராக, டொலருக்கு விலைபோய் காட்டிக கொடுப்புப் பணிகளில் ஈடுபடும் துரோகிகளை சமூகத்திலிருந்து நிரந்தரமாக வெளியேற்ற வேண்டிய கடப்பாடு இலங்கைத் திருநாட்டினை நேசிக்கும் ஒவ்வொரு பிரஜையினதும் தலையாய கடமை என்பதனை நாம் தெரிவிக்க விரும்புகின்றோம்.

நன்றி – இணையம்

## போலி அடையாள அட்டை இளைஞர் இருவர் கைது

(கொழும்பு)

போலியான 19 தேசிய அடையாள அட்டைகளை வைத்திருந்த இரு இளைஞர்கள் களுத்துறையில் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் அடையாள அட்டை ஒன்றை வழங்க 5ஆயிரம் ரூபா முதல் 10 ஆயிரம் ரூபா வரை அறவிட்டு வந்துள்ளதாகவும் பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளது.

நீண்ட நாட்களாக இவ்விருவரும் மேற்கொண்டு வந்த இந்த மோசடி குறித்து களுத்துறை தெற்கு பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலையடுத்து இருவரும் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் இதனைத்தயாரிக்க பயன்படுத்தும் கருவிகள் மற்றும் ஆவணங்களை கண்டுபிடிக்கவும் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

## நிதி சேகரிப்பில் சட்டவிரோத வழிகளை புலிகள் கையாண்டிருந்தனர்

### ஐரோப்பிய பொலிஸ் குற்றச்சாட்டு

(கொழும்பு)

புலிகள் தமது தீவிரவாதச் செயற்பாடுகளுக்கு நிதி சேகரிப்பதற்காக ஆட்கடத்தல் மற்றும் போதைப்பொருள் கடத்தல் போன்ற குற்றச்செயல்களில் ஈடுபட்டதாக ஐரோப்பிய காவல்துறை பணியகம் தெரிவித்துள்ளது.

தீவிரவாத நிலைமைகள் பற்றிய 2011ஆம் ஆண்டு அறிக்கையிலேயே ஐரோப்பிய காவல்துறை பணியகம் இவ்வாறு குறிப்பிட்டுள்ளது.

புலிகள் தமது ·செயற்பாடுகளுக்கு நிதி திரட்டுவதற்காக சட்டவிரோத குடியேற்ற நடவடிக்கைகளுக்கு உதவுதல், கடனட்டை மோசடிகள், சட்டவிரோத பணப்பரிமாற்றங்கள் மற்றும் மோசடிகள் போன்ற குற்றச்செயல்களில் ஈடுபட்டுள்ளனர்.

தமது உறுப்பினர்களிடம் நன்கொடை என்ற பெயரிலும், அங்கத்துவக் கட்டணம் என்ற பெயரிலும் அவர்கள் நிதிதிரட்டியுள்ளனர். ஆனால் அவை சட்டவிரோத வரிமுறை போன்று பலாத்காரமாகவுமே பெறப்பட்டன.

புலிகள் தமது கொள்கையைப் பரப்ப தொலைக்காட்சிகள், வானொலிகள் போன்ற ஊடகங்களையும், அனைத்துலக அளவில் பயன்படுத்தியுள்ளனர்.தீவிரவாத அமைப்புகள் தமது கொள்கைகளைப் பரந்துபட்ட அளவில் பரப்ப,இணையத்தளத் தொழில்நுட்ப வசதிகளைப் பயன்படுத்துவது அதிகரித்துள்ளதாகவும் ஐரோப்பிய காவல்துறையின் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## நாணயக்கடத்தல் சீனப்பிரஜை கைது

(கொழும்பு)

அமெரிக்க டொலர் மற்றும் சீன யுவான் நாணயங்களை கடத்த முயன்ற சீன நாட்டைச் சேர்ந்த நபர் ஒருவர் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்து சுங்கத்திணைக்கள அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டுள்ளதாக எமது விமான நிலையச் செய்தியாளர் தெரிவித்தார்.

குறித்த நபரிடமிருந்து 57இலட்சம் ரூபா மதிப்புடைய அமெரிக்க டொலர் மற்றும் சீன யுவான் என்பவற்றை கைப்பற்றியுள்ளனர்.

குறித்த நபர் 27வயதுடையவர் என்றும் வீதி அபிவிருத்திப் பணிகளுக்காக இலங்கைக்கு வந்தவர் என்றும் முதற்கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

# நிபுணர் குழு அறிக்கைக்கு சட்ட அந்தஸ்து உள்ளதா?

## அதைப் பெற்றுக்கொள்ள திரைமறைவில் முயற்சி

(கொழும்பு)

நிபுணர் குழு அறிக்கைக்கு சட்ட ரீதியான அந்தஸ்தைப் பெற்றுக்கொடுக்க வெளிநாட்டு உதவிகளில் செயற்படும் அரச சார்பற்ற நிறுவனங்கள் முயற்சிப்பதாக திவயின பத்திரிகை தெரிவித்துள்ளது. பான் கீ மூனின நிபுணர் குழு அறிக்கைக்கு சட்ட ரீதியான அந்தஸ்தைப் பெற்றுக் கொடுப்பதற்காக இலங்கையில் செயற்படும் ஒரு சில அரச சார்பற்ற நிறுவனங்கள் முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக அரசாங்கத்துக்குத் தகவல்கள் கிடைத்துள்ளன.

அதற்கென முன்னிலை வகிக்கும் அரச சார்பற்ற நிறுவனத்துக்கு அமெரிக்கா, பிரிட்டன், நோர்வே ஆகிய நாடுகளிலிருந்து முப்பது மில்லியன் டொலர்கள் நிதியுதவி கிடைத்திருப்பதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

நிபுணர் குழுவின் அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டிருப்பது போன்று போர்க்குற்றங்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்கான சுயாதீன கட்டமைப்பொன்றை ஏற்படுத்துவதுடன், அதில் தமிழ் மக்கள் சார்பான பிரதிநிதிகளையும் உள்ளடக்க வேண்டும் என்றும், பிரஸ்தாப அரச சார்பற்ற நிறுவனங்கள் வெளிநாடுகளுக்குக் கருத்துத் தெரிவித்திருப்பதாகவும் திவயின பத்திரிகையின் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

### யுத்த விசாரணை....

அனைத்து தரப்புகளும் எதிர்பார்த்ததுபோல் இலங்கையில் இடம்பெற்ற யுத்தக் குற்றங்கள் தொடர்பாக பக்கச்சார்பற்ற சர்வதேச விசாரணை ஒன்று நடத்தப்படவேண்டும் என்று நிபுணர் குழு தனது அறிக்கையில் பிரதான சிபார்சாக முன்வைத்திருக்கின்றது.

எனினும் இந்த அறிக்கை வெளியிடப்பட்ட சில நிமிடங்களில் ஐ.நாவின் செயலாளர் நாயகம் பான் கீ மூன் பிரத்தியேகமாக வெளியிட்ட பிறிதொரு அறிக்கையில், இவ்வாறான சர்வதேச விசாரணைக் குழுவை அமைக்கும் அதிகாரம் எதுவும் தனக்கு இல்லை என்றும், இது விடயத்தில் இலங்கை அரசு விரும்பவேண்டும் அல்லது உறுப்பு நாடுகள் கோரிக்கை விடுக்கும் பட்சத்திலேயே இவ்வாறான சர்வதேச விசாரணைகள் சாத்தியமாகும் என்று தெரிவித்துள்ளார்.

எனினும் சுமார் 216 பக்கங்களைக் கொண்ட இந்த அறிக்கையில் பல்வேறு விடயங்கள் குறித்து தத்துவார்த்த ரீதியிலான சிலாகிப்புக்கள் காணப்பட்டாலும் இலங்கை அரசு மீதும் புலிகள் மீதும் அடுக்கடுக்காக பல்வேறு குற்றச்சாட்டுகள் இந்த அறிக்கையில் பட்டியலிடப்பபட்டிருக்கின்றது.

அங்கத்துவ நாடுகள் இணக்கம் தெரிவித்தால் மாத்திரம் இலங்கையில் கடந்த 2009ஆம் ஆண்டு இறுதிக்கட்ட யுத்தத்தின்போது இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படும் போர்க்குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் சர்வதேச விசாரணைகள் மேற்கொள்ளப்படுமென ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூன் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

சர்வதேச விசாரணைகள் நடப்பதற்கு இலங்கை ஒத்துக்கொள்ள வேண்டும் அல்லது ஒரு பொருத்தமான சர்வதேச அரங்கத்தில் உறுப்பு நாடுகள் இதற்கான தீர்மானத்தை மேற்கொள்ள வேண்டும் என இந்த அறிக்கை வெளியான பின் விடுக்கப்பட்ட ஐ.நா.வின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இலங்கையில் இடம்பெற்றதாக கூறப்படும் போர்க் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் குறித்து ஆலோசனை வழங்குவதற்காக பான் கீ மூன் நியமித்த மூவரடங்கிய நிபுணர் குழுவின் அறிக்கையை நேற்று ஐ.நா. பகிரங்கமாக வெளியிட்டது.

இவ்வறிக்கையை வெளியிட வேண்டாமென இலங்கை அரசாங்கம் வலியுறுத்தயிருந்தமை குறிப்பிடத்தக்கது. எனினும் 216 பக்கங்கள் கொண்ட அறிக்கையை ஐ.நா. நேற்று உத்தியோகபூர்வமாக வெளியிட்டது. இவ்வறிக்கை தொடர்பாக ஐ.நா. செயலாளர் நாயகத்தின் பேச்சாளர் வெளியிட்ட அறிக்கையொன்றிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

" பொருத்தமான சர்வதேச அரங்கம்" என்பதனால் கருத்தப்படுவது யாது என பான் கீ மூன் கூறவில்லை. இது ஐ.நா.பாதுகாப்பு சபை, பொதுச்சபை, அல்லது மனித உரிமை கவுன்ஸிலாக இருக்க முடியும். இதேவேளை யுத்தத்தின் இறுதி கட்டத்தின்போது ஐக்கிய நாடுகளின் நடவடிக்கை பற்றி ஒரு விசாரணை நடத்தப்படுமென ஐ.நா.வின் செயலாளர் நாயகம் கூறியுள்ளார்.

"இலங்கையில் இடம்பெற்ற போரின்போது, குறிப்பாக போரின் கடைசி கட்டத்தில், தனது மனிதாபிமான மற்றும் மக்களை பாதுகாக்கும் கடப்பாடுகளை அமுல்படுத்துவது தொடர்பாக ஐ.நா.வின் கடப்பாடுகள் அமுல்படுத்தப்பட்டதா என்பதை ஆராய வேண்டும் என்ற சிபார்சுக்கு சாதகமாக பதிலளிக்க செயலாளர் நாயகம் தீர்மானித்துள்ளார்.

சம்பந்தப்பட்ட முகவர் நிறுவனங்களுடன் நிதி மற்றும் நிகழ்ச்சித் திட்டங்கள் குறித்து ஆராயப்பட்ட பின்னர் அந்த ஆய்வுக்கான சரியான முறைமை தீர்மானிக்கப்படும் என ஐ.நா. செயலாளர் நாயகத்தின் பேச்சாளரின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, நிபுணர் குழுவின் முதலாவது தீவிரமான சிபாரிசானது மேற்படி பாரதூரமான குற்றச்சாட்டுகளுக்கு இலங்கை அரசாங்கம் வினைத்திறனான பதிலளிக்கும் கடப்பாட்டுச் செயன்முறையை ஆரம்பிக்க வேண்டும் என்பதாகும். உண்மையான விசாரணைகளுடன் இதை ஆரம்பிக்க வேண்டும். இடம்பெற்றதாக கூறப்படும் மீறல்களுக்கு பதிலளிக்கும் கடப்பாட்டை இலங்கை ஏற்றுக்கொள்ள வேண்டும் என ஐ.நா. செயலாளர் நாயகம் தொடர்ச்சியான நிலைப்பாட்டை கொண்டுள்ளார் எனவும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இருபக்கத்தினரும் சர்வதேச மனிதநேய, மற்றும் மனித உரிமைச் சட்டங்களை மீறியதாக குற்றம் சாட்டப்படுமளவுக்கு சான்றுகள் இருப்பதாக 216 பக்க அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகளின் இணை நிறுவனங்கள் பொதுமக்களை பாதுகாக்க கூடிய நடவடிக்கைகளை எடுக்க தவறிவிட்டதாக ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

### அரசு மீது...

மனித உரிமை மீறல்கள். அதாவது இடம்பெயர்ந்தோர் மற்றும் புலிகள் என்ற சந்தேகத்திற்குள்ளானோர் நிலை.

❑போர்ப் பகுதிக்கு வெளியே நடைபெற்ற மனித உரிமை மீறல்கள் குறிப்பாக ஊடகங்கள் மீதும் அரசை விமர்சிப்போருக்கு எதிராக நடைபெற்ற சம்பவங்கள் என நடந்த குற்றங்களை ஐ.நா வரிசைப் படுத்தி பட்டியலிட்டுள்ளது.

# மரக்கறிச் செய்கையில் மன்னார் விவசாயிகள்



(அச்சுவேலி)

பெரும்போக நெல் அறுவடையினைத் தொடர்ந்து மன்னார் பகுதியில் விவசாயிகள் தானியப் பயிச்செய்கையிலும் மற்றும் இதர காய்கறிச் செய்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

நெல் அறுவடை நிறைவடைந்ததும், வயல் நிலங்களைப் பண்படுத்தி பயறு, உழுந்து, எள்ளு, கௌபி போன்ற தானியப் பயிர்களையும் பயிற்றை, வெண்டி, பூசிணி, கத்தரி, மிளகாய் போன்ற மரக்கறிப் பயிர்ச் செய்கையிலும், நிலக்கடலைச் செய்கையிலும் பெருமளவில் ஆர்வத்துடன் ஈடுபட்டு வருவதைக் காணக்கூடியதாக உள்ளது.

இம்முறை நெற்செய்கை மூலம் தம்மால் எதிர்பார்த்த வருவாயைப் பெறமுடியவில்லை எனத் தெரிவிக்கும் மன்னார் பகுதி விவசாயிகள் தானிய மற்றும் மரக்கறிப் பயிர்ச்செய்கையில் தாம் திருப்தி அடைந்திருப்பதாகவும் தெரிவிக்கின்றனர். (03)

# படைமுகாம்களில் வதிவிடப் பயிற்சி முஸ்லிம் மாணவர்களுக்கு பாதிப்பு

(கொழும்பு)

2011ஆம் கல்வி ஆண்டிற்காக பல்கலைக்கழகங்களுக்கு தேர்ந்தெடுக்கப்படவுள்ள மாணவர்களுக்காக உயர்கல்வி அமைச்சு முப்படைகளின் நெறிப்படுத்தலின் கீழ் படை முகாம்களில் நடத்தப்படவுள்ள மூன்று வார வதிவிட தலைமைத்துவ பயிற்சிநெறி கலாசார ரீதியில் முஸ்லிம் மாணவிகளுக்கு பல்வேறு பிரச்சினைகளை ஏற்படுத்தும் என மாற்றுக் கொள்கைக்கான பல்கலைக்கழக மாண வர் சங்கத்தின் தலைவர் சஹ்பி எச். இஸ்மாயில் தெரி வித்தார்.

தமது கலாசாரத்தை இறுக்கமாகப் பின்பற்றும் முஸ்லிம் பெற்றோர்கள் தமது பெண் பிள்ளைகளை இவ்வாறான பயிற்சி நெறியை தொடர்வதற்கு ஒரு போதும் அனுமதிக்கமாட்டார்கள் என அவர் குறிப்பிட்டார்.

இத்தலைமைத்துவ பயிற்சி நெறி அனைத்து மாணவர்களுக்கும் கட்டாயமாக்கப்பட்டுள்ளதனால் முஸ்லிம் மாணவிகள் தமது பல்கலைக்கழக கல்வியைக் கைவிட வேண்டிய நிலைமை ஏற்படும் என சஹ்பி எச். இஸ்மாயில் கூறினார்.

எனவே, முஸ்லிம்களின் கலாசாரத்தை கவனத்திற் கொண்டு குறித்த தலைமைத்துவப் பயிற்சிநெறியிலிருந்து முஸ்லிம் மாணவிகளுக்கு விதிவிலக்கு அளிக்குமாறு மாற்றுக் கொள்கைக்கான பல்கலைக்கழக மாணவர் சங்கம் உயர்கல்வி அமைச் சரிடம் வேண்டுகோள் விடுப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

### சாய்பாபாவுக்கு...

சரீரம் சாய் புட்டபர்த்தியின் குல்வந் அரங்கில் வைக்கப்பட்டுள்ளது. மத்திய மற்றும் மாநில அரசின் அரசியல் தலைவர்கள், வர்த்தகர்கள், கிரிகெட் பிரபலங்கள், பொலிவூட் நட்சத்திரங்கள் என பலர் தமது இறுதி அஞ்சலிகளை செலுத்தி வருகின்றனர்.

இந்தியாவின் நட்சத்திரத் துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கர், ஸ்ரீசாந், வி.வி.எஸ். லகஷ்மன் மற்றும் பாடகி பீ.சுசீலா உட்படபலர் தமது இறுதி அஞ்சலிகளை செலுத்தினர். இன்றும் பெரும்திரளான மக்கள் புட்டப்பர்த்திக்கு வருகை தருவார்கள் என எதிர்பார்க்கப்படுவதால் விசேட ரயில், பஸ் மற்றும் விமான சேவைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

குலவந் அரங்கில் குவியும் இலட்சக்கணக்கான சாய் பக்தர்கள் தமது இறுதி அஞ்சலிகளை செலுத்துவதற்கு நீண்ட வரிசைகளில் காத்து நிற்பதாக கூறப்படுகின்றது.

தமது வாழ்வில் பல்வேறு மாற்றங்களை ஏற்படுத்திய சாய் பாபவிற்கு அவரது பக்தர்கள் கண்ணீர் மல்க தமது இறுதி அஞ்சலிகளைச் செலுத்தி வருகின்றனர்.

பகவான் சத்ய சாய் பாபாவின் ஸ்தூல சரீரம் வைக்கப்பட்டுள்ள ஆந்திர மாநிலத்தில் நான்கு நாட்கள் துக்கதினம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன் புட்டப்பர்த்தி உள்ளிட்ட பல்வேறு முக்கிய நகரங்களிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. இன்று பூரண அரச மரியாதையுடன் பகவான் ஸ்ரீ சத்ய சாய் பாபாவின் சரீரத்திற்கான இறுதி கிரியைகள் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

### போர்க்குற்றங்களுக்கு...

மே 10 ஆம் திகதியும் எடுக்கப்பட்ட இந்தப் படங்களில் இலங்கை அரச படைகள் சிவிலியன் பாதுகாப்பு வலயத்தினுள் கண்மூடித்தனமாக ஆட்டிலறி ஷெல் தாக்குதல்கள் மேற்கொண்டமை தெளிவாக உள்ளது.

தாக்குதலுக்குள்ளான நிலையில் காணப்படும் உடையார்கட்டு மருத்துவமனை சுற்றாடலின் செய்மதிப் படங்களானவை இராணுவத்தின் பீரங்கிகள் எவ்வாறு பொதுமக்கள் இலக்கு நோக்கி நகர்த்தப்பட்டன என்பதனையும் தெளிவாகக் காட்டுகின்றன. இந்தப் படங்களே ஐக்கிய நாடுகளின் போர்க்குற்ற ஆதாரத்திற்கு போதுமானவை என புறொம்லி தெரிவித்துள்ளார்.

ஆனால் இந்தப் படங்கள் மிக அதிக செலவு கொண்டவை. அதாவது 20 அடி சுற்றுவட்டமுள்ள படம் ஒன்றின் விலை 10 ஆயிரம் டொலர்கள் எனவும், ஆகையால் இதனை சாதாரணமாக நிறுவனங்கள் வாங்க முற்படாது எனவும் அவர் கூறியுள்ளார்.

### ஆட்கடத்தல்...

சுமத்தப்பட்டுள்ளது. சர்வதேச ரீதியிலான பிரசார நடவடிக்கைகளுக்காக தொலைக்காட்சி மற்றும் வானொலி போன்ற சாதனங்களைப் புலிகள் பயன்படுத்தி வருவதாகத் தெரிவிக்கப்படு கிறது.

இணையத்தின் ஊடாக பயங்கரவாத மற்றும் தீவிரவாத அமைப்புக்கள் பல்வேறு செயற்பாடுகளை மேற்கொள்ளும் பாங்கு அதிகரித்துள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

### மீள்குடியேற்றக் கூட்டம்

(சாவகச்சேரி)


எழுதுமட்டுவாள் பிரதேசத்திலிருந்து இடம்பெயர்ந்து தற்போது வேறு இடங்களில் வாழ்ந்து வரும் மக்கள் தங்களை மீளக்குடி யேற்றம் செய்யுமாறு வலியுறுத்தி எதிர்வரும் சனிக்கிழமை காலை 10 மணிக்கு ஆலோசனைக்கூட்டமொன்றை கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலய மண்டபத்தில் நடத்தவுள்ளனர். இக்கூட் டத்தில் குறித்த பிரதேசத்திலிருந்து இடம்பெயர்ந்து வேறு இடங்களில் தங்கியிருக்கும் மக்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளனர். (11)

### பாதுகாப்பு அதிகரிப்பு

(தென்மராட்சி)

மிருசுவில் படுகொலை வழக்கு தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ள நீதிபதிகள் குழு இன்று சம்பவ இடத்திற்கு வருகை தந்து விசாரணைகளை மேற்கொள்வதனைத் தொடர்ந்து அப்பகுதியின் பாதுகாப்பு ஏற்பாடுகள் நேற்று முதல் அதிகரிக்கப்பட்டுள்ளன.

மேற்படி பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு சாவகச்சேரி நீதிவான் மா.கணேசராசா பொலிஸாருக்கு உத்தரவிட்டதுடன் சம்பவ இடத்திற்குச் சென்று நிலைமைகளை அவதானித்துள்ளார்.



# தனிக்குழு அமைக்கிறது ஐக்கிய தேசியக் கட்சி

(கொழும்பு)

ஐ.நா.நிபுணர் குழுவின் அறிக்கையை ஆராய்வதற்காக ஐக்கிய தேசியக் கட்சி விசேட குழு ஒன்றை நியமித்துள்ளது.

ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கை தொடர்பாக நுணுக்கமாக ஆராய்வதற்காக ஓய்வு பெற்ற சிரேஷ்ட அரசாங்க ஊழியர் பிரட்மன் வீரகோன் தலைமையிலான குழுவொன்றை ஐ.தே.க. நியமித்துள்ளது.

நிபுணர் குழுவின் அறிக்கை தொடர்பாக ஆராய்ந்து தமது அவதானிப்புகளை இக்குழு சமர்ப்பிக்கும் என ஐ.தே.க. பதில் பொதுச்செயலாளர் தயா பெல்பொல நேற்று விடுத்த ஊடக அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார். ஐ.நா. நிபுணர் குழு அறிக்கை தொடர்பாக பிரட்மன் வீரகோன் குழுவின் அவதானிப்புகளின் அடிப்படையில் ஐ.தே.க. உத்தியோகபூர்வமான நிலைப் பாட்டையும், அது தொடர்பாக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளையும் தீர்மானிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இக்குழுவுக்கான ஏனைய உறுப்பினர்களை ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க இரு நாட்களுக்குள் நியமிக்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## ஐ.நா.அறிக்கைக்கு எதிராக சப்ரகமுவ மாகாண சபையில் தீர்மானம்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்தின் நிபுணர் குழுவின் அறிக்கைக்கு எதிராக சப்ரகமுவ மாகாண சபையில் பிரேரணையொன்று நேற்று செவ்வாய்க்கிழமை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட குறித்த பிரேரணை ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் பான்கீ மூனுக்கு அனுப்பிவைக்கப்படும் என சபைத் தவிசாளர் ரஞ்சித் பண்டாரா தெரிவித்தார்.

மக்கள் விடுதலை முன்னணியின் மாகாணசபை உறுப்பினர் ரஞ்சித் பிரியந்த குமாரவும் ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்தின் நிபுணர் குழுவின் அறிக்கைக்கு எதிராக முதலமைச்சரினால் முன்வைக்கப்பட்ட பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்தார.

# ஐ.நா. அறிக்கைக்கு எதிராக புதிய பரப்புரைத் திட்டம்

## வட,கிழக்கு அரசியல்வாதிகளும் களத்தில்

நிபுணர்கள் குழுவின் அறிக்கைக்கு எதிராக கருத்துக்களை முன்வைக்க வடக்கு கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த பிரமுகர்களை அனுப்ப அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

பான்-கீ-மூனின் நிபுணர்கள் குழுவின் அறிக்கைக்கு எதிராக அரசாங்கத் தரப்பில் கருத்துக்களை முன்வைக்க வடக்கு கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த அமைச்சர்கள் மற்றும் தொகுதி அமைப்பாளர்கள் அடங்கிய தூதுக் குழுவொன்றை அனுப்பிவைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக அரசாங்கத்தின் அமைச்சர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இவர்கள் ஐ.நா பாதுகாப்புச் சபையில் அங்கம் வகிக்கும் 15 நாடுகள் மற்றும் மனித உரிமை பேரவையில் அங்கம் வகிக்கும் 15 நாடுகளின் பிரதிநிதிகளிடம் இந்த தூதுக்குழுவினர் விளக்கங்களை அளிக்கவுள்ளனர் எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தத் தூதுக்குழுவில் அங்கம வகிக்க விரும்பும் எதிர்க்கட்சிப் பிரதிநிதிகளுக்கும் சந்தர்ப்பம் வழங்கப்படும். இந்த விடயம் குறித்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வடக்கு கிழக்கைப் பிரதிநிதித்துவப்படு சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் அமைச்சர்கள் மற்றும் தொகுதி அமைப்பாளர்களை அண்மையில் சந்தித்து கலந்துரையாடியிருந்தார்.

# கோத்தபாய ராஜபக்ஷ உஷ்பெகிஸ்தான் பயணம்

(கொழும்பு)

பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ உத்தியோக்பூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு உஷ்பெகிஸ்தான் சென்றுள்ளார்.

இவர் நேற்று காலையில் உஷ்பெகிஸ்தான் நோக்கி பயணமாகியுள்ளதாக அரச தகவல்கள் தெரிவிக்கின்றன.

பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பாக உஷ்பெகிஸ்தானில் நடைபெறவுள்ள பாதுகாப்புத் தொடர்பான கூட்டமொன்றில் கலந்துகொள்ளும் பொருட்டே பாதுகாப்பு செயலாளர் அங்கு சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.



# அரச சேவைகளுக்கான போட்டிப் பரீட்சைகள்

(மானிப்பாய்)

இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படவுள்ள பரீட்சைகளுக்கான திகதிகளும், இடமும் பரீட்சை ஆணையாளர் நாயகம் அனுர எதிரிசிங்கவினால அறிவிக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் திறமை அடிப்படையில் பதவி உயர்த்துவதற்கான மூலம் அரச முகாமை உதவியாளர் சேவையின் அதியுயர் வகுப்புக்கு நியமனம் செய்யவதற்கான பரீட்சை (2010 - 2011) எதிர்வரும் 30ஆம் திகதி (30.04.2011) சனிக்கிழமை யாழ்ப்பாணத்திலும், கொழும்பிலும் நடைபெறவுள்ளது.

இலங்கை அரசாங்கத்தின் நூலகர் சேவையில் வகுப்பு IIIஇற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை 2010 - (2011) எதிர்வரும் 30ஆம் திகதி சனிக்கிழமை கொழும்பில் மட்டும் நடைபெறும்.

இலங்கை கால்நடை உற்பத்தி, சுகாதாரசேவை உத்தியோகத்தர்களுக்கான 1ஆம் வினைத்திறமை காண் தடைப் பரீட்சை 2010 (2011) எதிர்வரும் 30ஆம் திகதி சனிக்கிழமையும், மே மாதம் 07,08 ஆம் திகதிகளில் பெரதேனியாவில் மட்டும் நடைபெறவுள்ளது.

மேலே குறிப்பிடப்பட்ட பரீட்சைகளுக்கான அனுமதி அட்டைகளும், நேர அட்டவணைகளும் உரிய விண்ணப்பதாரிகளுக்கு அவர்களின் விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரிகள் மற்றும் மேலதிக விபரங்கள் கிடைக்கப்பெறும் விண்ணப்பதாரிகள் இருப்பின், தமது முழுப்பெயர், முகவரிகளுடன் 011-2785230, 011 - 2784232 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொள்ளுமாறு பரீட்சை ஆணையாளர் அறிவித்துள்ளார். (33)

# நிபுணர்குழு அறிக்கையால் கலவரம் ஏற்பட்டால் ஐ.நா.செயலர் பொறுப்புக்கூற வேண்டும்

## விஜயதாச ராஜபக்ஷ எம்.பி. கூறுகிறார்

(கொழும்பு)

ஐ.நா. நிபுணர்கள் குழு சமர்ப்பித்துள்ள அறிக்கையால் இலங் கையில் பொருளாதார நெருக்கடிகளோ அல்லது கலவரங்களோ ஏற்பட்டால் அதற்கு ஐ.நா செயலாளர் நாயகம் பான் - கீ மூன் தான் பொறுப்பேற்க வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப் பினர் விஜயதாசா ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

றோம் சட்ட விதி களுக்கு அரசு கட்டுப்படா ததால் இலங்கை மீது அனைத் துலக குற்றவியல் நீதிமன்றம் விசாரணைகளை மேற்கொள்ள முடியாது என பான் கீ மூனுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் அவர் தெரிவித்துள்ளர். அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

இலங்கையின் பொருளாதாரத்தில் தளம்பல் நிலை ஏற்பட்டு வன்முறைகள் வெடித்தால் அதற்கு ஐ.நா செயலாளர்தான் பொறுப்பேற்க வேண்டும்.

ஐ.நாவின் அறிக்கை பொருளாதார மற்றும் அரசியல் கட்டமைப்புக்களை சீர்குலைக்கலாம். ஐ.நாவின் விதிகளுக்கு முரணாகவே நிபுணர்குழுவின் அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

### புலிகள் மீது...

தமது போர்ப்படைக்கு சேர்த்தமை, ஆட்களை கட்டாயமாக வேலைவாங்கியது.

❑ குறைந்த வயதினராகக் காணப்படும் புலி உறுப்பினர்கள்.

தற்கொலைத் தாக்குதல்கள் மூலம் பொதுமக்களைக் கொன்றது.

### சமாதானத்தை...

யுத்தம் முடிவுறுத்தப்பட்டு குறுகிய காலத்தில் வடக்கு கிழக்கு மக்களுக்கு பல்வேறு நலத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

மீள்குடியேற்றம் உள்ளிட்ட பல்வேறு வழிகளில் அரசாங்கம் அபிவிருத்தி நோக்கி முன்நகரும் வேளையில் நிபுணர் குழுவின் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்தின் முயற்சிகளை ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலாளர் பான் கீ மூன் உள்ளிட்ட பல சர்வதேச தரப்பினர் பாராட்டியுள்ளனர்.

ஐக்கிய நாடுகளின் உறுப்பு நாடு என்ற வகையில் இலங்கை அரசாங்கம் பொறுப்புணர்ச்சியுடன் செயற்பட்டுவருகிறது.

தேவையேற்படும் நேரங்களில் இலங்கை அரசாங்கம் ஐக்கிய நாடுகளின் அமைதி காக்கும் படையணிக்கு படையினரை அனுப்பி வைத்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகளின் நிபுணர் குழு தனது வரம்பை மீறிச் செயறபட்டுள்ளது.

ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புப் பேரவை உறுப்பு நாடுகளான சீனா மற்றும் ரஷ்யாவிடம் உதவி கோரும் நிலைக்கு இலங்கையை, ஐக்கிய நாடுகள் அமைப்பு தள்ளிவிடுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்

### நிபுணர் குழுவின்...

இலங்கையில் போர் நடைபெற்றதற்கான அரசியல் - இராணுவ பின்னணியையும் ஆராய்ந்துள்ளனர். போரில் ஈடுபட்ட இலங்கை அரசாங்கத்தையும், புலிகளையும் விமர்சனம் செய்துள்ள அதேவேளையில், போர் நடைபெற்ற காலகட்டத்தில் துன்பத்திற்கு உள்ளாகிய அப்பாவி மக்கள் தொடர்பில் ஐ.நா சபை செயற்பட்டவிதம் தொடர்பிலும் கேள்விகளை எழுப்பியுள்ளனர்.

எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பில் இலங்கை அரசாங்கத்திற்கும், ஐ.நா சபைக்கும் பரிந்துரைகள் செய்யப்பட்டுள்ளன. புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் உள்ளிட்ட தமிழர் தரப்பு தொடர்பிலும் கருத்துகள் வெளியிடப்பட்டுள்ளன.

இந்நிலையில், உலகத்தின் தீவிரப் பார்வை இலங்கையிலே வாழ்கின்ற தமிழ் மக்களை நோக்கி திரும்பியுள்ள இவ்வேளையில், இலங்கையின் அனைத்து தமிழ்கட்சிகளையும் சார்ந்த அனைத்து கட்சிக் குழு அமைக்கப்பட்டு, ஐ.நா செயலாளர் நாயகத்தினால் நியமிக்கப்பட்ட ஆலோசனைக் குழுவின் அறிக்கை தொடர்பில், தமிழர்களின் பொது நிலைப்பாடு தாமதமின்றி அறிவிக்கப்பட வேண்டும் என மனோ கணேசன் வெளியிடுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேபோன்ற கோரிக்கையை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரகளான எம்.கே.சிவாஜி லிங்கம் மற்றும் சிறிகாந்தா ஆகியோரும் வலியுறுத்தியுள்ளனர்.

# மிரட்டிப் பணியவைக்கும் ஆயுதம்

இலங்கை அரசை மிரட்டிப் பணிய வைப்பதற்காக கையில் எடுக்கப்பட்ட ஆயுதமே நிபுணர் குழு அறிக்கை எனவும், அந்த அறிக்கையால் எவ்வித பாதிப்பும் ஏற்படப்போவதில்லையெனவும் கொழும்பு பல்கலைக்கழகப் பேராசிரியர் பிரதிபா மஹா நாம தெரிவிததார்.

கொழும்பு பல்கலைக் கழகத்தின் பேராசிரியர்கள் மற்றும் விரிவுரையாளர்கள் ஐக்கிய நாடுகள் நிபுணர்குழு அறிக்கைக்கு எதிராக மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகள் குறித்து விளக்கமளிக்கும் வகையில் நடைபெற்ற கூட்டத்தின்போதே பல் கலைக்கழகத்தின் சட்டபீட பேராசிரியரான மஹாநாம மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

### தந்தை செல்வாவின்...

நிகழ்வுகள் ஆரம்பமாகின.

முதலில் சர்வமத பிரார்த்தனை இடம்பெற்றது. தமிழ்நாட்டிலுள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் இயக்குநர் எஸ்.சந்திரகாசன் தந்தை செல்வாவின் நாடாளுமன்ற உரைகள் அடங்கிய நூல் ஒன்றினை வெளியிட்டு வைத்தார். முன்னாள் சுதந்திரன் ஆசிரியர் இ.சங்கர் அவர்களின் அறிமுக உரையை தொடர்ந்து நூலின் முதல் பிரதியை திரு.சி.வி.கே. சிவஞானம் அவர்கள் பெற்றுக் கொண்டார். அதனை தொடர்ந்து அஞ்சலி நிகழ்வின் முக்கிய நிகழ்வாக 34ஆவது ஆண்டு நினைவுச் சொற்பொழிவு இடம் பெற்றது.

யாழ் பல்கலைக்கழக முன்னாள் கலைப்பீடாதிபதியும் யாழ்ப்பாணம் சிந்தனைக்கூடம் எனும் ஆய்வு அபிவிருத்தி நிறுவனத்தின் இயக்குனருமான பேராசிரியர் இரா.சிவசந்திரன் அவர்களால் சொற்பொழிவு நிகழ்த்தப்பட்டது. "தமிழர் நிலத்தின் விவசாய அபிவிருத்தியும் நீர்வளப் பயன்பாடும்" எனும் தலைப்பிலான இவ் நினைவுச்சொற்பொழிவின் அச்சடித்த பிரதிகள் பங்குபற்றுனர்களுக்கு வழங்கப்பட்டது.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 ஏப்ரல் 27 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

14. பொலித்தீன் பையொன்றில் 25 கிராம் வீதம் ஒன்றரைக் கிலோகிராம் தேயிலையை எத்தனை பொலித்தீன் பைகளில் அடைக்கலாம்?

..............................................................................................

15. ஒரு பேனாவின் விலை 12.50 படி, ரவி ரூபா 200 ஐக் கொடுத்து 12 பேனாக்கள் வாங்கினான் எனின், கடைக் காரர் ரவிக்குக் கொடுத்த மிகுதிப் பணம் எவ்வளவு?

..............................................................................................

16. ஒரு பாடசாலையில் கற்கும் மாணவர்களின் மொத்த எண்ணிக்கை 3000 ஆகும். அதில் தமிழ் மாணவர்களின் எண்ணிக்கை 2/3 பங்காகும். மிகுதி சிங்கள மாணவர்களாகும். பாடசாலையில் கற்கும் தமிழ் மாணவர்களின் எண்ணிக்கையையும், சிங்கள மாணவர்களின் எண்ணிக்கையையும் தருக.

..............................................................................................

17. குளிர்பானப் போத்தல் ஒன்றின் விலை ரூபா 18.50 எனின், 12 குளிர்பானப் போத்தல்களின் விலை யாது?

..............................................................................................

18. 1463 ரூபாவை 7 பேருக்குச் சமமாகப் பங்கிடும்போது ஒருவர் பெறும் பணம் எவ்வளவு?


..............................................................................................

19. விமல் 4 லீற்றர் 850 மில்லிலீற்றர் பெற்றோலையும், கார்த்திக் அதன் 1/2 பங்கு பெற்றோலையும் வாங்கினர். இருவரும் வாங்கிய பெற்றோலின் அளவு யாது?

..............................................................................................

20. கூட்டுக. $\frac{1}{3} + \frac{5}{6}$

21. ஒரு பலகையில் இடைத்தூரம் 2 சென்ரிமீற்றர் ஆக இருக்குமாறு ஆணிகள் இறுக்கப்பட்டுள்ளன. ஆணிகளைச் சுற்றி றப்பர் பட்டியினால் அமைக்கப்படும் வடிவம் உருவில் காட்டப்பட்டுள்ளது. அவ்வடிவத்தின் பரப்பளவு யாது?



22. 915 புத்தகங்கள் மூன்று பெட்டிகளில் சம எண்ணிக்கையில் அடுக்கப்பட்டுள்ளன. ஒரு பெட்டியில் இருக்கும் புத்தகங்களின் எண்ணிக்கை யாது?

..............................................................................................

23. "நான் புலமைப்பரிசில் பரீட்சையில் அகில இலங்கையில் முதலாம் இடத்தைப்பெற வேண்டுமெனப் படித்துக் கொண்டிருக்கிறேன். நேற்றுப் பாடசாலை விட்டு வீட்டிற்கு வந்தபோது எனக்கு ஒரு அதிசயம் காத்திருந்தது. எனது மாமா வெளிநாட்டிலிருந்து வந்திருந்தார்". தொடர்ந்து கதையை எழுவாய், பயனிலை திருத்தமாக அமைத்து நான்கு சொற்களுக்குக் குறையாத 6 வசனங்கள் எழுதுக.

1. ..............................................................................................
2. ..............................................................................................
3. ..............................................................................................
4. ..............................................................................................
5. ..............................................................................................
6. ..............................................................................................

**எம்மால் வாரந்தோறும் வெளியிடப்படும் வினாத்தாள்களைப் பெற்று பயன்பெறும் மாணவர்களுக்கு அரசால் நடத்தப்படும் பரீட்சையில் முன்னணியில் உள்ள மாணவர்கள் கல்விமுரசு வாராந்தப் பயிற்சிபெற்ற வினாத்தாள்களை உறுதிப்படுத்தின் துவிச்சக்கர வண்டிகள் மற்றும் பெறுமதிமிக்க பரிசில்கள், சான்றிதழ்கள் வழங்கிக் கௌரவிக்கப்படும்.**



# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2011

பகுதி - II

1மணி 15 நிமிடம்

# கல்வி முரசு

வெளியீடு 11



**இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.**

**01) பின்வரும் விவரணத்தை வாசித்துக் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**

நான் ஒரு மின்னணுச் சாதனம். மனிதனது தேவைகளை நிறைவு செய்ய உருவாக்கப்பட்டவன். நான் நானாக இயங்காது, பிறர் கட்டளைகளுக்கு ஏற்பவே செயற்படுவேன். நான் எவரையும் ஏமாற்றுவதில்லை. ஏளனமாகச் சிரிப்பதில்லை. எனக்குப் பேராசை கிடையாது. எனது பணிகளை நிறைவாகச் செய்வேன். நேரத்தை வீண் விரய மாக்கமாட்டேன். நான் இன்று கல்வி, வணிகம், வங்கி போன்ற பல துறைகளில் முக்கிய பங்காற்றுகின்றேன். நான் உங்களுக்குச் சிறந்த ஆசிரியன். பிறருடைய வேகத்திற்குத் தகுந்தபடி மெதுவாகவும், துரிதமாகவும் கற்றுக் கொள்ள வழிகாட்டுவேன்.

01. பணிகளை நிறைவாகச் செய்வேன் என்ற வாக்கியத்தின் எழுவாய் எது?

..............................................................................................

02. இங்கு "விரயமாக்குதல்" என்ற சொல்லின் பொருள் யாது?

..............................................................................................

03. "நிறைவு" என்பதன் எதிர்க் கருத்துச் சொல்லை எழுதுக?

..............................................................................................

04. "கட்டளை" என்பதன் ஒத்த கருத்துச் சொல்லை எழுதுக.

..............................................................................................

05. "பங்காற்றுகின்றேன்" என்பதை இறந்த காலத்தில் எழுதுக.

..............................................................................................

06. "ஆசிரியன்" என்பதற்குரிய பெண்பாற் சொல்லை எழுதுக.

..............................................................................................

07. தன்மை ஒருமைப் பெயர்ச் சொல் ஒன்று எழுதுக.

..............................................................................................

08. "ஏமாற்றுவதில்லை" என்பதைப் பிரித்து எழுதுக.

..............................................................................................

09. "சிரிப்பதில்லை" என்பதன் உடன்பாட்டு வடிவம் யாது?

..............................................................................................

10. மின்னணுச் சாதனம் பங்காற்றும் முக்கிய துறையினை எழுதுக.

..............................................................................................

**02) பொருத்தமான சொல்லை அடைப்புக்குறிக்குள் இருந்து தெரிவு செய்து எழுதுக.**

01. நாங்கள..............................................................சென்றோம்.
(சரணலயம், சரணாளயம், சரணாலயம், சரணாழயம்)

02. மக்கள் அக்கிராமத்தை..............................................................கிராமம் என்று அழைத்தனர்.
(பூச்சோலைக், பூஞ்சோலைக், பூஞ்சேலைக், பூஞ்சோளைக்)

**03) பின்வரும் தொடர்புகளால் உணர்த்தப்படும் கருத்தினை எழுதுக.**

01. கைகொடுத்தல்

02. கிணற்றுள் தவளை போல

**04) பின்வரும் ஒவ்வொரு சொல்லுக்கும் ஆங்கிலச் சொல்லை (ஆங்கில எழுத்துக்களில்) எழுதுக.**

01. புத்தகம் :.................................... 02. பேனை :....................................

03. ஐந்து :.................................... 04. பச்சை :....................................

**05) பின்வரும் தொடர்புகளின் கருத்தினைத் தமிழில் எழுதுக.**

01. Silence please:.................................... 02. Come in :....................................

03. Thank you :.................................... 04. What is this? :....................................

**06) பின்வரும் தமிழ்ச் சொற்களின் கருத்தினைச் சிங்களத்தில் எழுதுக.**

01. அம்மா :.................................... 02. கதிரை :....................................

03. மாம்பழம் :.................................... 04. அதிபர் :....................................

**07) பின்வரும் சிங்களச் சொற்களின் கருத்தினைத் தமிழில் எழுதுக.**

01. பாசல :.................................... 02. சுதுபா(ட்)ட :....................................

03. கிரி :.................................... 04. குருத்துமி :....................................

**08) சரியான விடையின் கீழ்க் கீறிடுக.**

01. பொருட்களின் அதிர்வினால் உண்டாவது.
  1. வெப்பம் 2. ஒளி 3. ஒலி 4. மின்

02. பனிக்கட்டி நீராக மாறும்போது நடைபெறுவது.
  1. ஆவியாதல் 2. கரைதல் 3. ஒடுங்குதல் 4. உறைதல்

03. இரைமீட்கும் விலங்கு எது?
  1. கிளி 2. பூனை 3. புலி 4. மாடு

04. பறக்கும் பாலூட்டி எது?
  1. வெளவால் 2. கழுகு 3. காகம் 4. பருந்து

05. பக்கவேர்களில் உணவு சேமிக்கும் தாவரம்
  1. கரும்பு 2. கரட் 3. கச்சான் 4. கத்தரி

06. நீரின் மூலம் பரவும் வித்து
  1. முருங்கை 2. தேங்காய் 3. பனை 4. எருக்கலை

07. வெப்பத்தினால் விரிவடையக் கூடியது.
  1. இரும்பு 2. இறப்பர் 3. கல் 4. மண்

08. எமது நாட்டின் பெருந்தோட்டப் பயிர்களில் ஒன்று
  1. கறுவா 2. தேயிலை 3. ஏலம் 4. கராம்பு

09. அண்மையில் நடைபெற்று முடிந்த உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் சிறந்த ஆட்ட நாயகனாகத் தெரிவு செய்யப்பட்ட வீரர் யார்?
  1. டோனி 2. யுவராஜ்சிங் 3. சச்சின் 4. குமார் சங்கக்கார

10. நிறைபுரத உணவு வகை?
  1. பால் 2. கருவாடு 3. பாண் 4. சோறு

**09) பின்வரும் வீதிக் குறிகள் வெளிப்படுத்துவது யாது என்பதனை அடைப்பினுள் இருந்து தெரிவு செய்து அதன் இலக்கத்தை வீதிக் குறிக்கு எதிரேயுள்ள புள்ளிக் கோட்டில் எழுதுக.**

01.  ....................................

02.  ....................................

03.  ....................................

04.  ....................................

05.  ....................................

1. வாகனங்கள் நிறுத்தும் இடம்.
2. சிறுவர்கள் கடக்கும் இடம் முன்னால்.
3. பாதசாரிகள் கடக்கும் இடம்
4. ஒலி எழுப்பத் தடை
5. பாதசாரிகள் கடக்கும் இடம் முன்னால்
6. பஸ் தரிப்பிடம்





**10) பின்வருவான சரியாயின் "சரி" எனவும் பிழையாயின் "பிழை" எனவும் அருகேயுள்ள கூட்டினுள் எழுதுக.**

01. உலகிலேயே மிக நீளமான சுரங்கப்பாதை ஜப்பானில் உள்ளது. (....................................)

02. உலகில் அதிகமான மக்கள் ஆங்கில மொழியையே பேசுகின்றனர் (....................................)

03. ஒன்பதாவது உலக்கிண்ணக் கிரிக்கெட் போட்டிகள் நடைபெற்ற மேற்கிந்தியத் தீவுகள் ஆபிரிக்கக் கண்டத்தில் உள்ளது. (....................................)

04. முதலில் காகிதத்தை உபயோகித்தவர்கள் சீனர்கள். (....................................)

05. திமிங்கிலத்தின் வாயில் சுவை நரம்புகள் இல்லை. (....................................)

**11) பின்வரும் சொற்களைக் கொண்டு இடைவெளி நிரப்புக.**

**மின்பாரம் தூக்கி, மின்தூக்கி, பாரம் சாம்பி, லூயிபாஸ்டர், குறுக்குத் தையல், சோம் தையல், கிறுக்கல் சித்திரம், கொலாஜ் சித்திரம்.**

01. இரேகைகளைப் பயன்படுத்தி எழுந்தமானமாக வரையப்படும் கலைத்துவப் படைப்புக்கள்.................................... எனப்படும்.

02. இரு துணித் துண்டுகளை ஒன்றன் மீது ஒன்று வைத்துத் தைப்பதற்கு உதவக் கூடியதும், ஆரம்பத் தையல் முறைகளில் ஒன்றாகக் கருதக்கூடியதுமான தையல்....................................தையல் ஆகும்.

03. உயரமான கட்டடங்களிலுள்ள அறைகளுக்குச் செல்ல....................................உதவும்.

04. பாரமான பொருட்களை உயர்த்துவதற்கு / மேலே கொண்டு செல்வதற்கு / கிணற்றில் இருந்து நீர் இறைக்க ....................................உதவும்.

05. விசர் நாய்க்கடி தடுப்பு மருந்தைக் கண்டு பிடித்தவர் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த.................................... ஆவார்.

**12) ஒரு பாடசாலையில் 5A, 5B, 5C எனும் மூன்று வகுப்புக்களில் உள்ள எல்லா மாணவர்களும் 2006 ஆம் ஆண்டு 5 ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றினர். அதற்கான விபரங்கள் கீழுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது. அதன்படி, வினவப்பட்டுள்ள வினாக்களுக்கு விடைகளைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.**

| தரங்கள் | சித்தியடைந்தோர் | | சித்தியடையாதோர் | |
|---|---|---|---|---|
| | ஆண்கள் | பெண்கள் | ஆண்கள் | பெண்கள் |
| 5A | 13 | 11 | 9 | 15 |
| 5B | 9 | 8 | 10 | 11 |
| 5C | 15 | 7 | 12 | 9 |

01. மிகக் கூடுதலான பிள்ளைகள் இருந்த வகுப்பு யாது?
....................................

02. 5B வகுப்பில் உள்ள மொத்தப் பெண் பிள்ளைகளின் எண்ணிக்கை யாது?
....................................

03. 5C வகுப்பில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களின் மொத்த எண்ணிக்கை யாது?
....................................

04. 2006 ஆம் ஆண்டு அந்தப் பாடசாலையில் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடையாத மாணவர்களின் மொத்த எணணிககை யாது?....................................

ஒரு பாடசாலையில் 4A, 4B, 4C எனும் வகுப்புக்களில் இருந்த பிள்ளைகளின் எண்ணிக்கைகள் முறையே 45, 34, 38 ஆக இருந்தது. மூன்று வகுப்புக்களிலும் இருக்கும் மாணவர்களின் எண்ணிக்கை ஒரே சமமாக இருப்பதற்கு,

05. 4A வகுப்பில் இருந்து, 4B வகுப்புக்கு எத்தனை பிள்ளைகள் செல்ல வேண்டும்?....................................

06. 4A வகுப்பில் இருந்து, 4C வகுப்புக்கு எத்தனை பிள்ளைகள் செல்ல வேண்டும்?....................................

**13) பின்வரும் வினாக்களுக்குரிய விடைகளைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.**

01. ஒரு வண்டியில் 365 பேர் பிரயாணம் செய்தார்கள். முதலாவது நிலையத்தில் 98 பேர் இறங்க 48 பேர் ஏறினார்கள். இப்போது புகைவண்டியினுள் எத்தனை பேர் இருக்கிறார்கள்....................................

02. ஒரு தோடம்பழத்தின் விலை ரூபா 8.50 எனின் நான்கு தோடம்பழங்களின் விலை யாது?
....................................